Some months ago the Germans themselves paid a tribute to the relentless accuracy of British methods by the allegation (which happened to be unfounded) that British pilots had been court-martialled for bringing back exaggerated reports.

B.—German Methods.

Unlike the Italians, the Germans **publish no casualty lists.** Their statement, referred to above, that "eye-witness reports are unreliable", allows one to wonder on which of the five senses (if not on the sixth) they depend for their evidence. Their guiding principle appears to be to get their story in first, and **they have frequently broadcast figures while their planes were still in the air.**

Another practice is to make an approximate reversal of the official British figures, so that while the unfortunate listener has certain figures in his head he becomes confused as to what they refer to.

Two instances of direct imitation of British broadcasts have occurred. One was the Nazi "adoption" of the former British system of requiring two witnesses. Another is seen in such German reports as that of August 14th: "28 German planes failed to return. 5 German

pilots were saved". It is not hard to understand how British pilots can be saved by descending by parachute on English soil from a disabled plane. **But when German planes fail to return, where are the "saved" pilots?**

NAZI "RELIABILITY".

As proof of the credibility of their reports, the Nazis now repeatedly allege that German Supreme Command communiqués have in the past been consistently accurate.

Well, have they?

Remember, for instance, the *Graf Spee.* Until the moment when that great ship was scuttled to avoid facing the Britith cruisers again, the engagement was represented as a victory in German broadcasts, which almost established a record for ludicrous self-contradiction.

Remember the *Ark Royal*, repeatedly "sunk" by the German radio from last September 7th, onwards, then on December 18th accused by the Nazis of lying in wait for the *Graf Spee*, and finally on July 11th "hit" (according to Berlin) "by two Italian bombs of heavy calibre"!

Remember the *Repulse*, "damaged and disabled" in German reports of October 16th, "sunk" in the same manner on December 6th, brought up from the bed of the ocean to be again "heavily damaged" on February 9th, and finally (February 16th) "docked for repairs" to the original damage sustained 120 days previously!

Or look at the German figures over a long period, from which it can be seen that **the enemy claim to have sunk or seriously damaged far more battleships, aircraft-carriers and cruisers than Britain ever possessed.**

Type of Warship.	Actually Lost.	No. in British Possession at Outbreak of War.	Enemy claims to have sunk.
Battleships and Battle-Cruisers.	1	15	32
Aircraft-Carriers ...	2	7	10
Cruisers ...	3	62	83
Destroyers ...	28	185	92
Submarines ...	13	58	52

One more instance of the hollowness of German High Command claims will occur to everybody. **The B. E. F. in France and Flanders was said to be surrounded and faced with the choice between**

surrender and annihilation. The B. E. F. neither surrendered nor was it annihilated. The epic of the withdrawal is known to the whole world.

TREATMENT OF NEUTRAL JOURNALISTS.

A.—Germany.

A favourite Nazi propaganda device is to broadcast the "evidence" of neutral journalists who are said to have been taken round the areas in Germany subject to R. A. F. bombing and to have found no damage. The names of these journalists are never published. But their conditions of work under Nazi control are known.

There is the unimpeachable evidence of the American radio commentator Warren Irvin, who has worked both in Berlin and London, where he now is. Here are some of the facts he relates: "The correspondents are not as free as the Nazis would like you to believe. Those who play the game are sure of being rewarded, but those who don't are equally sure of being disciplined. If the story of a foreign correspondent offends the Nazis, he may find that when a party is taken on a trip to the front there will be no room for him.........We had to submit our scripts to three separate censorships."

And now Hitler's friend Mussolini has let the cat out of the bag. Here are two items recently broadcast from Italy.

"Germany has ordered an American journalist to leave the occupied area, for he was publishing anti-Nazi reports." (13-8-40).

"It is reported from Berne that the German authorities have ordered another American journalist to leave German-occupied France within six days." (14-8-40).

B.—Britain.

"Among the belligerents Britain has the speediest and most reasonable censorship".—*American paper, Time.*

On August 11th, a party of American and Empire correspondents, having been allowed to choose which British port they would like to visit, were taken to Bristol, where they walked and drove freely around docks, oil depôts and other military objectives. They found no evidence to support the German claims.

THE VERDICT.

"If this is a new Trafalgar or a 1940 version of Waterloo, an extraordinary fact is that **the R. A. F. are outnumbered but still hold command of the air** over Britain".—*New York Times*, 16-8-40.

"The Nazis have made no moral impression whatever. One thing that is sure is that **an overwhelming attack has been launched and it has failed utterly to overwhelm or anything like it**".—*New York Herald Tribune*, 17-8-40.

"It is possible to say that the British in their methodical way, streaked with gallantry, are giving an extraordinary account of themselves in the air. It becomes clearer and clearer that **those who reported on the unity and determination of the islanders in this crisis, were speaking cold facts**".—*Baltimore Sun*, 17-8-40.

"I went through all of the famous Portland yards and docks. Concussion of bombs had blown slate roofs off a few buildings, but the buildings themselves were otherwise undamaged. **There was no damage that I could observe to any of the vital elements of the naval establishment in Portland.** It is still doing business. Probably the most impressive thing about this aerial warfare is the speed with which it happens, and the calmness of the people. If one must be bombed, one could not ask for better company".—*American Columbia Broadcast based on report by their observer, Mr. Morrow*, 17-8-40.

"**O. K. Your Admiralty are honest folk right enough**".—*American journalist in conversation with Mr. Alan Bell after the visit to Portland*, 16-8-40.

"I know what the British blockade is doing to Germany, but if as the Germans claim their own blockade of Britain is having the same result, I can only say that this result is not apparent to the naked eye, Here in London business is going on as usual.........There is plenty to sell, and plenty of people to buy".—*Mr. Warren Irvin, in a broadcast* 12-8-40.

———

APPENDIX III.

Examples of Misleading Statements in Enemy Broadcasts to India and the Near East for the period August 13th—August 19th, 1940.

A.—GERMAN BROADCASTS.

13—8—40.

1. Mr. Amery does not seem to realize that Germany's military policy aims at destroying the enemy's means of resistance and not of terrifying the population.

NOTE :—(i) "The member of the German Relief Organization visited the town (Warsaw). He stated that 70 per cent. of all houses, especially in the densely populated districts, were completely destroyed.........Several months after the bombardment of Warsaw dead bodies were found under the ruins.".—*German Broadcast 25—7—40.*

(ii) "When women (in England) will look in vain for their children, when wives will see the charred body of their husbands, when mothers will weep over the homesteads lost, and people will cry for food......".—
German Broadcast 6—8—40.

2. It should always be remembered that the German Supreme Command is interested in winning the war, and not battles of propaganda in the daily papers.

NOTE :—" More than once I was tormented by the thought that if Providence had put the conduct of German propoganda into my hands......the outcome of the struggle might have been different......".-*Hitler, Mein Kampf.*

3. All political parties in India have rejected the Viceroy's proposal.

NOTE :—The Hindu Mahasabha has accepted the proposal subject to certain conditions. The Muslim League has not expressed any opinion so far but the general trend of Muslim opinion is overwhelmingly sympathetic. Politicians of the Liberal school have advised acceptance of the proposal. Opinion in Congress circlcs is undoubtedly hostile but the Congress has so far expressed no opinion on the subject.

14—8—40.

4. The British pilots appear so completely exhausted that they will soon begin to fall asleep during the flights.

NOTE :—These " exhausted " pilots have, nevertheless, succeded in bringing down 571 German planes in the week ending midnight August 18th.

15—8—40.

5. It is learned that German parachutists were able to land during last night in Birmingham, and it is also reported that the clothes of a German parachutist were found in a meadow near Birmingham. There were similar occurrences in other English towns. The British police are trying their best to keep these incidents secret.

NOTE :—On the night of August 13th a number of empty parachutes were dropped by enemy aircraft. By a somewhat unfortunute oversight in many instances the harness of these had not even been undone, so the desired impression that Germany hoped to make a number of parachutists abroad in England, was frustrated by their own stupidity. On the night of August 17th further parachutes were dropped by enemy aircraft and many people saw parachutes being dropped, picked up by searchlights and followed to the ground, where Home Guards were ready to pick them up. Wide publicity has been given all over England to the finding of these empty parachutes, and the R. A. F. officer in charge of the investigation stated the number dropped was about eighty. The whole thing is regarded in London as an excellent opportunity for actively testing the local defence organizations which are stated to have operated with considerable efficiency.

6. Germany denies the British allegations that Germany has stolen the food-stuffs of the occupied territories. Germany, on the contrary is showing a strong feeling of responsibility towards these parts of the Reich.

NOTE :—The Italian Stefani News Agency (reported Aug. 15th) stated that the British blockade cannot possibly affect the food supply of Germany and Italy. But on the other hand it imposes grievous shortages and sacrifices upon the vanquished countries. England thinks that Germany in consequence of her victory has assumed an obligation to feed people rendered hungry by the British blockade. " This is an absurd and immoral illusion ".

It is not surprising that Dr. Goebbels, the German Propaganda Minister, found it necessary to send for the President of the Italian News Agency *Stefani* "to discuss with him measures for achieving closer collaboration between German and Italian News Agencies".—*German broadcast in Arabic, 14—8—40.*

7. Now it is rumoured that Britain intends to confiscate all Indian gold and that is why many Indians are sending their gold to other countries especially to Siam.

NOTE :—The Government of India has no intention and never had any of interfering in any way with private property. Not a single ounce of gold has been sent from India to Siam during the last three months.

8. Eden, the British War Minister, said yesterday that Britain will not only defend herself but will also launch an attack on Germany. Eden's statement only evokes laughter in informed circles as during the air raids of the last three days British ports and aerodromes have been destroyed and now Britain has no base from which she could launch any attack.

NOTE :—(i) *Stefani* reports that the R. A. F. flying at a great height bombed undefended and open cities in Northern Italy.—*German broadcast 2½ hours earlier the same day.*

(ii) In an attempt to bomb the Danish town of Aalborg 16 out of 23 British fighters were shot down.—*German broadcast, the preceding day.*

(iii) British planes raided the town of Gerechsweiler in Germany.—*German broadcast, the following day.*

16—8—40.

9. The British fighters are stubbornly defending their island. They are bearing the burden of defence alone. The British anti-aircraft defence turned out to be a failure.

NOTE :—The Air Ministery News Service states that "Yesterday (August 18th) 70 German bombers paid British anti-aircraft gunners the biggest compliment in their power.........they turned back. As the Germans approached the outer part of the Thames estuary they were received with a hail of shells from anti-aircraft batteries. At this moment a patrol of Spitfires approached the scence of action.........they arrived just in time to see the enemy retreat. One Spitfire pilot said afterwards; 'The whole formation just turned and went back'."

10. The American News Agency, *Associated Press*, commenting on the German attack on the aerodrome at Croydon, writes: "After the attack, smoke-clouds were observed."

NOTE:—There is a good reason for fathering this report on an American agency. Not one of the German bombers that attacked Croydon escaped to tell the tale.

17—8—40.

11. Terrific air battles are in progress. The British are doing their utmost to check the German thrust .....The British and German planes are fighting until one or the other is brought down. (12-30 p.m.).

NOTE:—Countless German fighters were waiting in vain for the British planes to start counter attack, but only a few isolated Hurricanes were there to protect London.—*German broadcast, 5.30 p. m.*

18—8—40.

12. England is, strictly speaking, nearer to Germany than Germany is to England.

NOTE:—It must be with this kind of arithmetic that the German Supreme Command get their figures for air losses.

13. A severe blow has been given Britain by the sinking of five million tons of British shipping.

NOTE:—Britain has lost only 1,340,004 tons of shipping since the commencement of the war. Including the Allied shipping lost by enemy action (436,633 tons) and neutral shipping (738,162 tons) the total loss is 2,514,795 tons—nearly half of the German claim. This loss has been more than made up by captures from the enemy, new building and (excluding Danish and French ships) flag transfers. At the outbreak of the war the British Empire merchant fleet consisted of 18,500,000.

B.—ITALIAN BROADCASTS.

13—8—40.

14. A few days ago it was announced by us that British authorities were compelling Egyptians to evacuate big towns. The B. B. C. denied this .....Railway figures show that from July 11th to July 14th (inclusive) 25,090 persons left Cairo......Why have such large numbers left Cairo?

NOTE:—According to the 1937 census the population of Cairo is 1,307,422. The average daily exodus from Bombay is not likely to be less.

15—8—40.

15. Where is the British Fleet? There has been no trace of her superiority so far. The British fleet has suffered heavy damage and it is considered wise not to use it any more.

NOTE :—(i) Reuter's special correspondent August 15th writes: "I have just returned from a forty-eight hour cruise in the Straits of Gibraltar aboard a British warship, and the experience has convinced me that a ship can pass into or out of the Mediterranean only if the Royal Navy so desires."

(ii) Two days before this Italian broadcast, British light naval forces off the Somaliland coast bombarded an Italian troop concentration between Zeilah and Berbera. Two days after the broadcast British battleships and cruisers inflicted heavy damage by bombardment off Bardia and Fort Capuzzo in Libya and other military objectives in the vicinity.

17—8—40.

16. By declaring that the British cannot defend British Somaliland without the aid of the French, the British have once again shown that Britain would fight to the last Frenchman.

NOTE :—The *New York Times*, (reported August 15th) said that Britain ignored the Nazi sneer that she "would fight to the last Frenchman", but "to-day Britain gives her answer before all the world. Alone in England, and unafraid, they fight for France—to the last Briton."

17. The Indian National Congress has declared that she will use violence if Britain does not concede India's right of framing her own constitution.

NOTE :—The Congress has declared that it "steadfastly adheres to the principle of non-violence" in internal political struggle but renounces the principle against outside aggression.

பிரஸங்கம் IX.

பால்கன் நாடுகள்.

சண்ட மாருதத்துக்குச் சமானமான மகாயுத்தங்கள் ஐரோப்பாவில் நடக்கின்றன. இவைகளுக்கு மூலகாரணம் பால்கன் நாடுகளே. இப்பொழுது நடக்கும் மகா யுத்தத்திலும் பால்கன் வியவகாரங்களேற்பட்டிருக்கின்றன. இவைகள் சென்ற வாரத்தில் பலப்பட்டு இதன் முடிவாக ருமேனியா சீர்கெட்டு நிற்கிறது. தற்சமயம் சச்சரவு சற்று ஓய்ந்திருந்தாலும், எதிர்காற்றுக் கிளம்பிப் புதுப் புயலடிப்பதுபோல், வேறு காரணங்களால் புது யுத்தமேற்படலாம்.

2. இது ஐரோப்பாவுக்கு வெகு காலமாய் ஏற்பட்ட வினை: பிதுரார்ஜிதம்: புராதன சரித்திரம் இதை விளக்கும்; ஆனாலிதை விஸ்தரிக்க இது சமயமல்ல. ஆனால் ஒரு விஷயம்; சமீபத்திலேற்பட்ட ஒவ்வொரு வில்லங்கமும் பால்கன் நிலைமையைப் பொறுத்திருக்கும். ஆஸ்திரியா, ஜெர்மனி, இதாலி தேசத்திலிருந்து 'மூவர் நேயம்' என்ற உடன்பாடு (Triple Alliance) ஏற்பட்டது. இதிலிருந்து ஒதுக்கப்பட்ட பிரான்ஸ், ரஷியாவுடன் சேர்ந்தது. ஒரு தேசமும், மற்றொன்றைக் காட்டிலும் வலுக்கக்கூடாதென்ற கொள்கை கொண்ட பிரிடன் பிரான்ஸோடு சேர்ந்துகொண்டது. துருக்கியில் 1908 வருஷம் நடந்த ராஜீய கலக மாறுதலில் இருந்து பால்கன் தேசிய உணர்ச்சி பலப்பட்டது. ஆனால், நீடித்த மனஸ்தாபங்களாலும், தீராப் பகைகளாலும் இந்த உணர்ச்சி மழுங்கிப்போயிற்று. இறுதியில் 1913-ல் ஏற்பட்ட புகாரஸ்ட் உடன்படிக்கையிலிருந்து தாத்காலிய சமாதானமேற்பட்டதேயொழிய நிலைத்த அமைதியைக் காணோம்.

3. 1914-ல் ஸெர்பியாவில் பிடித்த நெருப்பு காலாக்கினியாகப் பரவி ஐரோப்பாவை நாலு வருஷகாலம் தகித்தது. தோல்விக்கக்ஷியைச் சேரும் சுபாவமுள்ள பல்கேரியா ஜெர்மனியைச் சேர்ந்தது. ஸெர்பியா, ருமேனியா, கிரீஸ் நாடுகள் நேயர் கக்ஷிக்காகக் கடும்போர் செய்தன. இதிலிருந்து, சமாதானம் ஏற்பட்டவுடன், ஸெர்பியாவுக்கு அந்தஸ்தும், ராஜ்யமும் கிடைத்தது. யுகோ-ஸ்லாவியாவென்ற புதுப் பெயரோடு ஏடிரியாடிக் எதிர்கரையில் இதாலிக்குப் போட்டியாக ஸ்தாபிக்கப்பட்டது. ஹங்கேரியாவிலிருந்து டிரான்ஸில்வேனியாவும், பல்கேரியாவிலிருந்து டாப்ருஜாவும் சேர்க்கப்பட்டு ருமேனியாவின் ஆகிருதி இரட்டித்தது. பல்கேரியா இருந்த இடம் தெரியாமல் சுருங்கிற்று.

4. இவைகளிலிருந்து முளைத்த வினைகள் பல. ஹங்கேரிக்கும் பல்கேரியாவுக்கும் கோபம். இதாலி பியூம் துறைமுகத்தைப் பிடுங்கிக்கொண்டதிலிருந்து யுகோ-ஸ்லாவியாவுக்கு ரோஸமேற்பட்டு இதாலியை விரோதித்துக்கொண்டது. இந்தக் காரணங்களால் யுகோ-ஸ்லாவியாவுக்கு மூன்று சத்துருக்கள் ஏற்பட்டார்கள்.

5. இதாலிக்கும், யுகோ-ஸ்லாவியாவுக்கும் சமரசமுண்டாக்க, பிரான்ஸ் முழுமனதுடன் தலைப்பட்டது உண்மையே. ஆனால் 1934 அக்டோபரில் யுகோ-ஸ்லாவிய அரசர் அலெக்ஸாண்டர் மெர்ஸெயில்ஸுக்கு விஜயம் செய்தபோது,

இவரும், எம். பார்தோவும் கொலை செய்யப்பட்டதிலிருந்து இந்த முயற்சி நின்று விட்டது. இக் கொலைகளை ஏதோ ஒரு சதியாளர் சங்கம்தான் செய்திருக்க வேண்டும். இதன் ரந்திரம் ஐரோப்பிய மத்திய தேசங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

6. யுகோ-ஸ்லாவியாவுக்கு வேறு சில துன்பங்களுமுண்டு. குரோட்ஸ், ஸெர்ப்ஸ், ஸ்லொவனிஸ் என்ற பல ஜாதிகள் சேர்ந்த தேசமிது; இவர்களுக்குள் ஒற்றுமை கிடையாது. பொறுப்புக்கு வேண்டிய செல்வமும், சைன்யமும் இல்லை. இதற்குப் பணவுதவி செய்த பிரான்ஸ் இப்பொழுது அடிபட்டுக் கிடக்கிறது. ராணுவ உதவி செய்த ருமேனியா, ஸெகோ-ஸ்லாவேகியாவும் ஜெர்மனியின் காலில் மிதிபட்டுக் கிடக்கின்றன. ஆனால் ஸெர்பியர்கள் கௌரவமும், பராக்கிரமமும் உள்ளவர்கள்; தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்வார்கள்.

7. ருமேனியாவைப்பற்றி நாள் தவறாது செய்திகள் வருகின்றன. ருமேனியாவை ஜெர்மனியின் களஞ்சியமென்றும், தங்கச் சுரங்கமென்றும் சொல்லலாம்; கொள்ளையடிக்கச் சரியானவிடம். எண்ணெயும், கோதுமையும் அபரிமிதமாய்க் கிடைக்கும் நாடு. தான்யம், மரம், எண்ணெய், எண்ணெயிலிருந்து எடுபடும் இதரச் சரக்குகள் இவைகளுக்கெல்லாம், ஜெர்மனி ருமேனியாவை நம்பியிருக்கிறது. இந்த எண்ணெயில் மூன்றிலொருபாகம் இதுவரை மெடிடரேனியன் கடல் மார்க்கமாய் ஜெர்மனிக்கு வந்தது. சண்டையிலிருந்து இந்த வழி அடைபட்டுப்போக, இப்பொழுது டான்யூப் நதிவழியாயும், ரயில் வழியாயும் கொண்டுவரப்படுகிறது. நதிவழி கொண்டுபோகப் போதுமான கப்பல்களில்லாமல் 660,000 டன் எண்ணெய்தான் அனுப்பப்படுகிறது; ஜெர்மனிக்கு இது போதவே போதாது. ஆற்றை எதிர்த்துக் கப்பலோட்டுவது கடினமாயிருக்கிறது; கரைகளிலும் கிட்டங்கிகள் போதாது. ரயில் பாதைகளும், எண்ணெய் ஏற்றிச்செல்லும் ரயில் வண்டிகளும் குறைவு. ரஷியாவிலிருந்து கிடைக்கும் எண்ணெயும், நதி, ரயில், கால்வாய் மார்க்கமாய் பால்டிக் கடலுக்குவந்து, அங்கிருந்து தென் ரஷியா, போலந்து துவாரமாக, ஜெர்மன் துறைமுகங்கள் சேரவேண்டும். உறைபனி, மழைப்பனி, வண்டிக்குறைவு, வெகு தூரத்திலிருந்து கொண்டுவரும் பிரயாசம்—இம்மாதிரி கஷ்டங்களுமிருக்கின்றன. ஒப்பந்தப்படி 150,000 டன் எண்ணெய் ருமேனியா கொடுத்தாலும் ஜெர்மனிக்குப் போதவே போதாது. ருமேனியாவைப் பகைத்துக்கொண்டால் இதுவும் போய்விடும்; ரஷிய எண்ணெயும் தடைப்படும். ஆகவே ருமேனியாவின் தயவை ஜெர்மனி விசேஷமாக நாடவேண்டும்.

8. ஜெர்மன்—ருமேனிய நட்பு நிலைக்காது; ருமேனியா, ஜெர்மன் கக்ஷியில் சேர்ந்ததே தப்பு. பெஸரேபியாவை ரஷியாவுக்குக் கொடுப்பதில்லையென்று தனது அயல்நாட்டு இலாகா மந்திரி எம். டிடலெஸ்க்யு முடித்த உடன்படிக்கையை, ஹிட்லர் மோகத்தில் சிக்கிய ருமேனிய அரசர் ரத்துசெய்து, மந்திரியையும் வேலையிலிருந்து நீக்கிவிட்டார். பிரிடனும் கைவிட்டது. சமயம் பார்த்து பெஸரேபியாவையும், புகோவினாவையும் ரஷியா பிடுங்கிக்கொண்டது; ருமேனியா

ஏமாந்தது. ஹிட்லருக்கு இஷ்டமில்லாமலிருந்தாலும், மேற்கு முனைச்சண்டை முடிகிறவரையில் ரஷியாவின் தயவின் அவசியத்தால் சும்மாவிருக்க நேரிட்டது. ஆனால் ரஷியா நிரந்தரமாய் அபகரித்துவிடமுடியாது; ரஷியக் கரடிக்குத் தாத்கால்யமாய்ப் பணிகாரம் சிறிது அகப்பட்டுவிட்டது உண்மையே. எந் நிலைமையிலும் இரண்டு மாகாணங்களைக் கொடுத்தது ஹிட்லருக்குக் கசப்பாகத் தான் இருந்திருக்கும். ஆனால் அதற்கு வேறு வழியில்லை.

9. அடுத்தபடியாக பல்கேரியாவுக்கு டாப்ருஜாவைக் கொடுக்க பலவந்தம் செய்தார்கள். 'கேட்டதெல்லாம் தியாகம்' என்று சொல்லும் ஸ்திதிக்கு ருமேனியா வந்துவிட்டது. இதிலிருந்து, துணிவு ஏற்பட்டு ஹங்கேரியும் டிரான் ஸில்வேனியாவைக் கேட்டது. ஐரோப்பாவுக்குள்ளேயே டிரான்ஸில்வேனியா ரம்மியமான தேசம். பூமியின் அமைப்புப்படி இது ஹங்கேரி சமவெளியின் ஒரு பாகமாக, கார்பேதியன் மலையால் ருமேனியாவிலிருந்து பிரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மலைக்கணவாய் வழியாக, சுமார் 1,500,000 ருமேனியர்கள் டிரான்ஸில் வேனியாவுக்குவந்து குடியேறியிருக்கிறார்கள். எப்படியிருந்தபோதிலும் 1914–18 யுத்தத்தின் முடிவில் ருமேனியாவுக்குத்தான் டிரான்ஸில்வேனியா பாத்தியமென்று முடிவு செய்யப்பட்டது.

10. புழுவானாலும், மிதிபட்டால் திருப்பிக்கடிக்காதா? ஹங்கேரி, டிரான்ஸில்வேனியா பாத்தியம் கொண்டாடுவது ருமேனியாவுக்குச் சகிக்கமுடிய வில்லை. ஹிட்லருக்கில்லாது எண்ணெய்க் கிணறுகளைக் கொளுத்திவிட யோஜித் தது; சண்டைக்கும் தயாராயிற்று.

11. முடிவில் ருமேனிய எண்ணமெல்லாம் வீணாயிற்று. பால்கன் நாடுகளில் யுத்தம் பரவுவதில் ஹிட்லருக்கு இஷ்டமில்லை. ருமேனிய அரசன் சுபாவமறிந்து, யுக்தியாக, வியன்னாவில் சபைகூட்டி, ஜெர்மன், இதாலி அயல்நாட்டு மந்திரிகளைக் கொண்டு மத்தியஸ்தம் பேசுவதுபோல் பாசாங்கு செய்து, டிரான்ஸில்வேனியா வில் பாதி பாகத்தை ஹங்கேரிக்குக் கொடுத்து விட்டார். இந்த எதிர் பார்க்காத சம்பவத்திலிருந்து, (கார்பேதியன் இரு பார்சத்திலும் வசிக்கும்) ருமேனியருக் கெல்லாம் திகைப்பும், துக்கமும், கோபமும் வந்திருக்கிறது. போகும்வழி தெரியாமல், சும்மாவிருக்கவுமிஷ்டமில்லாமல் பலவிடங்களில் கண்டனக்கூட்டங் கள் கூடி ஆரவாரம் செய்கின்றார்கள். ஜென்ரல் டி கால் தலைமையில் ஸ்வதந்திரம் இழக்காத பிரெஞ்சுக்காரர்கள் கூடியிருக்கும் பிரகாரம் இங்கும் ஒரு கக்ஷியேற் படலாம். ஹிட்லரை நம்புபவர்களின் கதி இதுதான்.

12. மானத்தைக் காப்பாற்றிக்கொள்ளவும், தற்காப்பை உத்தேசித்தும் ருமேனியா சும்மா இருக்கக்கூடாது. இருந்தால் சின்னாபின்னமாய்ப்போய், ஜெர்மனியோடு ஐக்கியமாகி, ஜெர்மனியின் எண்ணெய் வியாபாரியாய்ப் போக வேண்டிவரும். இதற்கு ரஷியா குறுக்கிடாமலிருக்கவேண்டும்.

13. ரஷியா குறுக்கிடுமென்பதில் சந்தேகமில்லை. ருமேனியாவிடம் கிட்டிய நட்பு; டான்யூப் துறைமுகங்களை ஜெர்மனி கைப்பற்றச் சம்மதியாது; மேலும் தனக்கு இரை கிடைத்து விட்டபடியால் ருமேனியாவைக் காப்பாற்றப்பார்க்கும். துருக்கிக்குமிது சம்மதமாகும்: ஏனெனில் துருக்கிக்கும், ரஷியாவுக்கும் பல நாள் நட்பு.

14. இந்த நட்பு ஜெர்மனி கண்ணை உறுத்துகிறது; இதைக் கெடுப்பதே ஜெர்மனியின் முக்கிய நோக்கம்; இதற்காக சமீபத்தில் ஜெர்மனி பிரசுரித்த சில தஸ்தாவேஜுகளைப் பொயயென்று துருக்கி கண்டிக்கலாயிற்து. சண்டையை மூட்டி விட்டால் ரஷியாவுக்கு விரோதமாகத் துருக்கி ஜெர்மனியோடு சேர்ந்து விடுமென்பது எண்ணம். ரஷியர்கள் காரியவாதிகள்; ஏமாந்துவிட மாட்டார்கள். ஜெர்மன் ஸ்தானிகர் ஹெர்வான் பேபன் லாலனைக்கு மயங்காது ஆங்கில-துருக்கி உடன் படிக்கைக்குத் துரோகமின்றி துருக்கி நடந்து கொள்ளுகிறது. இஸ்டாம்பூலை ரஷியா அபகரிக்காத வரையில் துருக்கி சிநேகம் மாறாது. பாஸ்பரஸ், டார்டனல்லிஸ் பாதைகள் அடைபடக்கூடாதென்பதுதான் ரஷியாவின் கோரிக்கை: துருக்கி அதற்கு சம்மதித்திருக்கிறது. துருக்கியின் நோக்கங்கள் ஆசியா கண்டத்தைச் சேர்ந்தவையாயிருந்தாலும், ஐரோப்பிய வியவகாரங்களில் துருக்கியை நிராகரிக்க முடியாது.

15. ரஷியாவுக்கும், ஜெர்மன்-இதாலிய அச்சுக்கும் சமீபத்தில் மனஸ்தாப மேற்படுமென்பது அறிந்தவர்கள் எதிர் பார்க்கும் காரியம். தென்ருமேனியா வழியாய்ச் சென்று பல்கேரியாவையும், யுகோ-ஸ்லாவியாவையும் சேர்த்துக் கொள்ள ரஷியா முயற்சிக்கிறது. இதற்கெதிரிடையாக ஸ்லவோனிகாவைப் பெரிதாக்கி, ருமேனிய, ஹங்கேரிய புது டிரான்ஸில்வேனியா, டான்யூப் கரை இவைகளை எல்லையாயமைத்து, தேசத்தை விஸ்தாரப்படுத்துவது ஜெர்மனியின் எண்ணம். மேலும் டான்யூப் சங்கம தீரத்தையும், கருங்கடல் ஓரத்தையும், பல்கேரியாவோடு பங்கு போட்டுக்கொள்ளுவது ரஷ்யாவின் எண்ணம்; இதே மாதிரி, இக்கடற்கரை வர தனக்குமொருபாதை வேண்டுமென்பது ஜெர்மனியின் எண்ணம். ஜெர்மனியின் எண்ணம் பலித்தால் ருமேனிய எண்ணெய் ரஷியாவுக்குக் கிடைக்காது; யுகோ-ஸ்லாவியாவும் பிரிந்து விடுவதோடு, இதாலியிதை யெதிர்த்தால், ரஷிய உதவி கிடைக்காது.

16. ஜெர்மனியின் பால்கன் கொள்கை ரஷியாவுக்கு விரோதப்பட்டுக் கொண்டுவருகிறது. ஆகஸ்ட் ஆரம்பத்தில் ஸால்ஸ்பர்க் கூட்டத்தில் ரஷிய குடி-சமத்துவக் கக்ஷியை எதிர்க்க எடுத்துக்கொள்ளவேண்டிய முறைகளைப்பற்றி ஹெர்வான் ரிப்பன்ட்ராப் விவரித்ததை அங்கு கூடிய மாக்யார்கள், ஸ்லோவாக்ஸ், பல்கேரியர்கள், ருமேனியர்கள் ஒப்புக்கொண்டார்கள். பால்கன் வெளி நாட்டுக் கொள்கையில் பிறர் பிரவேசிக்கக்கூடாதென்றும், பால்கன் அரசாட்சி, பொருளாதார விஷயங்கள் ஜெர்மனியைச் சேர்ந்ததென்றும் சொல்லப்பட்டது. இதை ஒத்து, சபை கலைந்த பிறகு, பிரடிஸலாவாவில் கூடிய கூட்டமொன்றில் ஸ்லாவோகிய பிரதம மந்திரி, டாக்டர் டியூகா, ஸ்லாவோகியாவில் ரஷியர்கள்

இருக்கக்கூடாதென்று எச்சரிக்கை செய்தார். ஸால்ஸ்பர்க் கூட்டம் எதிர்காலக் கலகங்களுக்கு அறிகுறியாகும். ரஷிய-ஜெர்மன் தாத்காலிக சிநேகம் நிலைக்காது. பால்கன் உடன்படிக்கையை நிராகரித்துவிட்டு பல்கேரியாவின் சாச்வத நட்பை யுகோ-ஸ்லாவியா நாடவேண்டுமென்று ஜெர்மனி ஸ்பஷ்டமாக ஜாடை செய்திருக்கிறது.

17. நடப்பதெல்லாம் கண்ணைக்கட்டிக் காட்டில் விட்டால்போலிருக்கிறது; புத்திக்கெட்டாத சிக்கலாயிருக்கிறது. இதையெல்லாம் அறிந்தும் ஹிட்லர் நிலையில்லாத பால்கன் சமாதானத்தை நிலைக்க வைக்கப்பார்க்கிறார். முடிவில் ருமேனியாவைப் பங்கிட நேரிடும்; சண்டை செய்யாமல் ரஷியா தனக்கு வேண்டியதை எடுத்துக்கொள்ளும்; பிறகு பார்த்துக்கொள்ளுவோமென்று ஹிட்லர் பின்வாங்கி, சும்மாயிருந்து விடுவார். ஆனால் ரஷியாவை ஏமாற்ற முடியாது. ரஷியா, ராஜ்ய தந்திரத்தில் காரியவாதி; மார்க்ஸ் தத்துவப்படி வந்ததை வரப்பற்றிவிடும்; பிறகு, ஜெர்மனி சண்டைக்கிழுத்தால், துருக்கியோடும், பிரிடனோடும் சேர்ந்துகொள்ளும். மிஸ்டர் ஆர். எ. பட்லர் சொல்லியபடி ரஷிய நட்பை பலப்படுத்துவதே பிரிடனின் நோக்கமாகும்.

18. பால்கன் எதிர்காலம் ருமேனியாவைப் பொறுத்திருக்கிறது. டிரான்ஸில்வேனியாவைப் பிடுங்கிக்கொண்டதிலிருந்து செழித்த பிரதேசமெல்லாம் போய் விட்டது; இனிக்கஷ்டம் தாங்க முடியாது. ருமேனிய அரசனையும் ஜனங்களையும் ஹிட்லர் அரட்டி உருட்டி, சற்று ஏய்க்கலாம். சற்று பலிக்கவும் பலிக்கலாம். ஆனால் கொள்ளைக்காரனைப்போல் நிர்ப்பந்தம் செய்து ஏற்படுத்திய உடன்படிக்கை நிலைக்காது. மணிக்கு மணி ஸ்திதி மாறிக்கொண்டிருக்கிறது. கடைசியாகவந்த சமாசாரத்திலிருந்து நாடு முழுவதும் கொதித்துக் குழம்பிக்கொண்டு இருக்கிறதாகத் தெரியவருகிறது. ஒரு புதிய மந்திரிசபை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அரசனின் உரிமைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. ருமேனிய ஸோவியட் எல்லைப்புறத்தில் ஜெர்மன் படைகள் இருப்பதாகப் பேச்சுக்கிளம்புகிறது. ருமேனியர்கள், ரோசமுள்ள ஜாதி; கௌரவஸ்தர்கள்; கட்டாயத்தின் மேல் கையொப்பமிட்ட உடன்படிக்கையை எதிர்க்காது கைகட்டியிருக்க மாட்டார்கள். புழுவானாலும், மிதிபட்டால் திருப்பிக் கடித்துவிடும். அரசர்களும், ஜனங்களும் சும்மாயிருப்பார்களா?

வார யுத்தச் செய்திகள்.

(30—8—40 லிருந்து 4—9—40 வரை).

போது சமாசாரம்.—ஸெப்டம்பர் 3-ம் தேதியோடு யுத்தம் ஆரம்பித்து ஒரு வருஷமாகிறது. எதிரியின் ஆக்கிரமணங்கள் திடுக்கிடக்கூடியனவாயிருந்தாலும் அவன் துரோகங்கள் மலைபோல் நின்றாலும், இந்த மகா யுத்தத்தில் பிரிடன் நிர்ப் பயத்தோடு அஜாத சத்துருவாய் விளங்குகிறது. முற்றுகை யென்ற இரும்பு வளையத் தால் எதிரியைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கிறது; வெற்றிக்கு வேண்டிய பலத் தைச்சேகரித்துக் கொண்டிருக்கிறது. மிஸ்டர் ஏமரி சமீபத்தில் சொல்லியபடி, "1805-ல் ஆஸ்டர்லிட்ஸ், 1806-ல் யானு வெற்றிகளையடைந்த நெபோலி யனுடைய ஸ்திதியில் ஹிட்லர் இப்பொழுது இருக்கிறார். நெபோலியன் வெற்றி யடைந்த அக்காலத்தில் அதர்மக் கொடுங்கோலை எதிர்க்கப் பிடிபட்ட நாடுகள் பலத்த பிரயத்தினங்களைச் செய்தன. பிரிடனும் முற்றுகை போட்டது; நெபோலியனுக்கு, தன் அக்கிரமத்திலிருந்து பின் வாங்க எண்ணங்கொண்டாலும், முடியாமல் போயிற்று. இறுதியில் நெபோலியன் தொலைந்தான். அதேப் பிரகாரம், ஹிட்லரும் தொலைந்து போகவேண்டியதுதான். நெபோலியனைவிடச் சீக்கிரம் ஹிட்லர் ஆதிக்கம் அழிந்து விடும்.

வெற்றிச் சின்னங்களும் ஏற்கனவே காணப்படுகின்றன. பிரிடன் படை யெடுப்பு, ஆக்ரமிப்பு என்ற ஜெர்மனியின் ஜம்பப்பேச்செல்லாம் நடக்கவில்லை. ஏதோ ஜெர்மன் விமானங்கள் வந்து போய்க் கொண்டிருப்பதைத்தவிர, வெற்றி யொன்றையும் காணோம். ஒவ்வொரு எதிர்ப்பின் முடிவிலும் பிரிடனுடைய ஆகாய மேன்மை ருஜுவாகிறது. நாளுக்கு நாள் பிரிடனுடைய விமானப் படை கள் அதிகப்படுகின்றன. ஜெர்மன் படையை விட பிரிடனுடைய ஆகாயசைன்யம் பலமாய்க் கொண்டிருக்கிறது. சீக்கிரத்தில் ஜெர்மனியை யெதிர்க்கும் பிரமேயம் வந்து விடும்.

அந்த சமயம், எதிரி பிடித்திருக்கிற பிரான்ஸ் முதலிய அருகாமையிலுள்ள தேசங்கள் நமக்கும் இறங்கி எதிர்க்க சௌகரியமாயிருக்கும்".

விமானப்போர்.—வெகுதரமாய் ஒவ்வொரு தினமும் ஏற்படும் எதிர்ப்பி லிருந்து, ஜெர்மனி பீத்திக்கொண்டபடி, பெர்லின் எதிர்க்க முடியாத நகரமா யில்லை யென்று தெரிகிறது. அங்கே உண்டாகும் சேதத்தை வெளிக்காட்டா திருந்தாலும், ஜெர்மன் பத்திரிகைகளில் காணப்படும் "கொலை", "கொலையும் பயங்கரமும்" என்ற தலையங்கங்களிலிருந்து ஜனங்களுடைய பீதியை யூகிக்கலாம். இருந்தபோதிலும், லண்டனுக்குப்பதிலாக பெர்லின் பழிவாங்கப்படுவதாக நினைக்கக்கூடாது. பாதுகாப்பில்லாத ஸ்நானகட்டமாகிய ராம்ஸ்கேட்டை எதிர்த்து 1000 ஏழைகளின் வீடுகளை ஜெர்மானியர் அழித்துவிட்டார்கள். ஆனா லும், பெர்லினிலிருக்கும் சான்ஸலர் மாளிகை, ஆகாய மந்திரி ஆபீஸ் முதலியவற்றை பிரிடன் உடைத்துவிட முடியுமென்றாலும் பிரிடன் நிதானம் தவறி அநியாய மொன்றும் செய்யாது; ராணுவகேந்திரங்களை மட்டுமே எதிர்க்கும்.

லண்டன் இரவு எதிர்ப்புகள் நிற்கவில்லை. ஆனால் அதைப்பொருட்டுச் செய்வதாகக்காணோம். ரயில், டிராம் முதலிய போக்கு வரத்து சாதனங்கள் வழக்கம்போல் ஓடிக்கொண்டிருக்கின்றன. போஜன ஸ்தலங்களில் சந்தோஷத்துக்குக் குறைவில்லை: நாடகங்களும், சினிமாக்களும் நடந்துகொண்டிருக்கின்றன.

இது வரையில் ஜெர்மனிக்கு 1,752 விமானங்கள் நஷ்டம்: பிரிடன் மேல் படை யெடுத்ததிலிருந்து 1,137 விமானங்கள் நஷ்டம்: இவைகளின் விவரம்:—

தேதி.	ஜெர்மன் விமான நஷ்டம்.
ஆகஸ்ட் 8 லிருந்து 31-வரை	1,071
ஸெப்டம்பர்-1	24
ஸெப்டம்பர்-2	42
ஆக மொத்தம்	1,137

இந்த வாரத்திய விமான எதிர்ப்பு விவரம், இதன் இறுதியில் பார்க்கலாம்.

ருமேனியா.—ஜெர்மனியும் இதாலியும் பலவந்தப்படுத்தி ருமேனியாவை, தன் தேசமாகிய டிரான்ஸில்வேனியாவில் மூன்றிலிரண்டு பங்கை ஹங்கேரிக்குக் கொடுக்கச்செய்திருப்பதைப்போல் துரோகமும், பயமுறுத்தலும் நாம் கேழ்விப்பட்டதில்லை. இந்த வார ஆரம்பத்திலிருந்தே ருமேனியாவுக்கும் ஹங்கேரிக்கும் நேர்ப் பேச்சு நின்றுவிட்டது. ஜெர்மனிக்காக வான் ரிப்பென்டிராப்பும், இதாலிக்காக கவுண்டு ஸியானோவும், இரண்டு நாட்டு மந்திரிகளை வியென்னாவில் 29-ம் தேதி, மத்தியஸ்தத்திற்கென்று அழைத்து, ஜெர்மன் சைன்யங்களை எல்லைப்புறங்களில் நிறுத்திக்கொண்டு, டிரான்ஸில்வேனியாவில் ஒரு பாகத்தைக் கொடுக்காவிட்டால் முழுதேசத்தையும் பிடுங்கிக்கொள்ள நேரிடுமென்று பயமுறுத்த, ருமேனியா, பிழைத்தால் போதுமென்று சம்மதித்து விட்டது. ஏற்கனவே பெஸரேபியா, டாப்ருஜா, புகோவினாவை இழந்த ருமேனியா, மேலும் 19,000 சதுரமைல் நாட்டையும் 2,750,000 பிரஜைகளையும் பெய்யா-மேரேவிலிருக்கும் தங்க, அபிரகச் சுரங்கங்களையும் இழக்க நேரிட்டது. இந்த பாகங்களை 14 தினங்களுக்குள் ருமேனியா காலி செய்யவேண்டுமாம். கைமாறிய பிரதேசங்களில் கலகமேற்பட்டிருக்கிறது.

பிரெஞ்சு குடியேற்ற நாடுகள்.—ஆபிரிக்காவில் பூமத்திய ரேகை (Equatorial) யிலிருக்கும் பிரெஞ்சு குடியேற்ற நாடுகளெல்லாம் பிரிடன் கக்ஷியைச் சேர்ந்துவிட்டன. இவைகளில் முதலில் சேர்ந்தது சாட்; பின் சேர்ந்தவை காமெரூன்ஸும், காங்கோவும். இவைகள் சேர்ந்ததால் இதாலியர் தெற்கே படையெடுக்க முடியாது. பிரிடனுக்கு வேண்டிய சரக்குகள் இந்தப் பிரதேசங்களிலிருந்து காங்கோ நதி வழியாய், கடற்கரை வந்து ஏற்றுமதியாகலாம்.

பெரும்பாலான வோட்டுகளால் பிரெஞ்சு குடியேற்ற நாடுகளான மார்டினிக், நியுகாலடோனியாதீவுகள் பிரிடனோடு சேரச்சம்மதம் கொடுத்திருக்கின்றன.

தூரக் கீழ்நாடு.—இந்த தேசங்களின் நிலைமையை மாற்றக்கூடாதென்று அமெரிக்கா எச்சரிக்கை செய்திருக்கிறது.

பிரெஞ்சுக்காரர்கள் 1893-ல் எடுத்துக் கொண்ட பாகங்களைத் தாய்லாந்துக்குக் கொடுத்து, அதற்கு பதிலாக தாய்லாந்தில் கடல்விமானப்படைகள் வைத்துக் கொள்ள ஸ்தலங்கள் சிலவற்றை ஜப்பான் கேட்பதாகப் பிரஸ்தாபம்: தாய்லாந்து ஏமாந்துபோகாதென்று தோன்றுகிறது.

அமெரிக்கா.—அமெரிக்கர் அனுதாபம் பலனைக்கொடுக்கும் போலிருக்கிறது. யுனைடெட்ஸ்டேட்ஸுக்கும், பிரிடனுக்கும் தற்காப்பு உடன்படிக்கை ஏற்பட்டு, விமான, கடற்படை நிலயங்களுக்காக பிரிடன் சில இடங்களைக் குத்தகைக்கு விடுவதாயும், பிரதியாக, அமெரிக்கா பிரிடனுக்கு 50 நீர்மூழ்கிகள் விற்பதாயும் தெரிகிறது.

கடற் சண்டை.—320 குழந்தைகளை ஏற்றிச்சென்ற கப்பலொன்று வெடிகுண்டுக்குப் பலியாயிற்று. நன்குப் பழக்கப்பட்டவர்களாதலால் குழந்தைகள் தைர்யமாயிருந்தார்கள். ஒரு குழந்தைகூடச் சேதமில்லை.

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டம்.
26—8—40. (திங்கட்கிழமை.)			
	பகலில்.—விமான நிலயங்கள்.—ஜெர்மனி (Germany) ஆக்ரமித்திருக்கும் நாடுகள்	1 விமானம்.	......
	இரவில்.–27 விமான நிலயங்கள்.–ஜெர்மனி (Germany), ஹாலந்து (Holland), பெல்ஜியம் (Belgium) பிரான்ஸி (France)ல் விரோதி ஆக்ரமித்திருக்கும் பாகம்.	......	நாசமாயின.
	எண்ணெய் ஆலை.—லூனு (Leuna) ...	......	தீப்பிடித்தது.
	எண்ணெய்க் கிடங்கு, விமான உற்பத்தி சாலை.—பிராங்பர்ட் (Frankfurt).	......	......
	வெடிமருந்துகள் செய்யும் ஆலை.—க்ரஷீம் (Greisheim) ஹோக்ஸ்ட் (Hoechst), கொலோன் (Cologne), லீப்ஸிக் (Leipzig).	......	......
	சர்மான் கிடங்குகள்.—ஹாம் (Hamm), ஷீவர்ட் (Schwerte).	......	......
	ஒரு சுழல் விமானம்.—நிவல்ஸ் (Nivelles), விமான நிலயம்.	......	சுட்டு வீழ்த்தப்பட்டது.
	சாயக் கம்பெனி.—லூனு (Leuna) ...	......	அதிகச் சேதம்.
	பியட் (Fiat) தொழிற்சாலை.—டூரின் (Turin).	......	தீப்பிடித்தது.

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டம்.
26—8—40. (திங்கட்கிழமை)—தொடர்ச்சி.			
	மாக்னடோ (Magnaeto) தொழிற்சாலை மிலான் (Milan).	2 விமானங்கள்.	......
	ராணுவ முக்யத்வம் வாய்ந்த இடங்கள்.—மோகாதிஷு (Mogadishu).	......	அனேக கட்டடங்கள் இடிந்தன. தீப்பிடித்தது.
	விமான நிலயங்கள்.—டெஸ்ஸி (Dessie, பார்டியா (Bardia), எல்ஆடம் (El Adem).	......	ராணுவ காரியாலயங்கள் நாசமாயின.
27—8—40. (செவ்வாய்க்கிழமை).			
	இரவில்.—கப்பல் நிற்குமிடங்கள்.—கீல் (Kiel), வில்ஹெல்ம்ஷாவன் (Wilhelmshaven).	......	தீப்பிடித்தது.
	மின்சார ஆலை.—கெல்ஸ்டர்பாக் (Kelsterbach).	......	......
	மெஸ்ஸர்ஸ்மிட் (Messerschmitt) ஆலை.—ஆக்ஸ்பர்க் (Augsburg).	......	......
	எண்ணெய்க் கிடங்குகள், சாமான் கிடங்குகள்.—மான்ஹீம் (Mannheim).	......	......
	விமான நிலயங்கள்.—ஜெர்மனி (Germany)		
	எண்ணெய்க் கிடங்குகள்.—பாயில்லாக் (Pauillac), பிரஸ்ட் (Brest), செர்பரோ (Cherbourg), கிராண்டு (Gironde) நதி முகத்துவாரம்.	......	தீப்பிடித்தது.
	பியட் (Fiat) ஆலை.—டூரின் (Turin) ...	......	......
	மாரெல்லி (Marelli) ஆலை.—ஸான்கயோவன்னி (Sangiovanni).	......	......
28—8—40. (புதன்கிழமை).			
	பெர்லின் (Berlin) (3 மணி நேரம் படையெடுப்பு).	......	தீப்பிடித்தது.
	பெர்லினின் வடக்கு, கிழக்குப் பிரதேசங்கள்.	......	அதிகச் சேதம்.
	கோயர் லிட்ஸர் சாமான் கிடங்கு.—கிழக்கு பெர்லின் (Berlin).	....	28 ஜனங்களுக்குக் காயம்; 10 மனிதர்கள் இறந்தனர்.

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டம்.
28—8—40.	(புதன்கிழமை)—தொடர்ச்சி.		
	ராணுவ முக்யத்வம் வாய்ந்த இடங்கள்.— ஜெர்மனி (Germany), ஹாலந்து (Holand), பிரான்ஸி (France)ல் ஜெர்மானியர் ஆக்ரமித்திருக்கும் பிரதேசங்கள்.	......	......
	விமான உற்பத்திசாலை.—லீப்ஸிக் (Leipzig).	......	......
	ஜங்கர்ஸ் தொழிற்சாலை.—டெஸ்ஸா (Dessau).	......	......
	எண்ணெய்க் கிடங்குகள்.—ரீஷால்ஷ் (Reisholz), டார்ட்மண்ட் (Dortmund), நார்டன்ஹாம் (Nordenham).	நஷ்டமில்லை 2 விமானங்கள்.	தீப்பிடித்தது.
	அனேக விமான நிலயங்கள் ...	பழுதாயின விமானிகள் உயிர்தப்பினர்.	......
	ஒரு பெரிய கப்பல்.—ராதிநோ (Rathenow) வுக்கருகிலுள்ள ஒரு கால்வாய்.	......	படுசேதமாயிற்று.
	எண்ணெய்க்கிடங்கு, ஒரு காவல்காக்கும் கப்பல்.	......	தீப்பிடித்தது.
	ஒரு சாமான் ஏற்றிச் செல்லும் கப்பல்.— நார்வேஜியன் (Norwegian) கடற்கரை	நஷ்டமில்லை.	கப்பல்மேல் குண்டு விழுந்தது.
29—8—40.	(வியாழக்கிழமை).		
	பகலில் :—		
	விமான நிலயங்கள்.—ஹாலந்து (Holland).		
	துணைக்காவல் கப்பற்படை, கப்பல்கள்.— டச்சு (Dutch) கடற்கரை, ஆபர்ன்டார்ப் (Oberndorf), டென்ஹெல்டர் (Denhelder).	......	14 சிறிய கப்பல்களும் ஒரு பெரிய கப்பலும் சேதமடைந்தன.
	இரவில் :—		
	க்ருப் (Krupp) தொழிற்சாலை.—எஸ்ஸன் (Essen).	......	தீப்பிடித்தது.
	எண்ணெய் சுத்திசெய்யும் ஆலைகள்.— கெல்ஸன்கர்சன் (Gelsenkirchen), பொட்ராப் (Bottrop).	......	வெடித்தன.

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டம்.
29—8—40.	(வியாழக்கிழமை)—தொடர்ச்சி.		
	செயிண்ட் நாஸேர் (Saint Nazaire) ...	......	தீப்பிடித்தது.
	மின்சார உற்பத்தி ஆலை.—டூயிபர்க் (Duisburg), ரீஷால்ஷ் (Reisholz).	......	நாசமாயின.
	அநேக ராணுவ முக்யத்வம்வாய்ந்த இடங்கள்.—ரூர் (Ruhr).		
	சாமான் கிடங்குகள்.—ஹாம் (Hamm), ஸோயஸ்ட் (Soest).	......	குண்டு விழுந்தது.
	விமானநிலயங்கள்.—ஜெர்மனி (Germany), ஹாலந்து (Holland), பெல்ஜியம் (Belgium), பிரான்ஸ் (France).		
	உலை.—பான் (Bonn) ...	3 விமானங்கள்.	......
	வேவு பார்த்தல்.—குப்ரா (Kufra) ...		
	கப்பல்கள்.—டெர்னு (Derna) துறைமுகம்.	......	2 கப்பல்கள் தீக்கு இரையாகிவிட்டன.
	செங்கடலி (Red Sea)-ல் உள்ள மோக்ரா (Mocra)த் தீவு.	......	ஒரு கட்டடத்தின் மேல் குண்டு விழுந்தது.
	சாமான்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்யும் இடங்கள், சைன்யங்கள் தங்குமிடங்கள்.—ஹாரார் (Harar).	......	கட்டடங்கள் நாசமாயின.
	மோட்டார்வண்டிகள் நிற்குமிடம்.—டெஸ்ஸி (Dessie).	நஷ்டமில்லை.	......
30—8—40.	(வெள்ளிக்கிழமை).		
	பேர்லின் (Berlin) (2-மணி நேரம்) ...	......	எங்கும் தீப்பிடித்தது
	பேர்லின் (Berlin) பிரதேசத்திலுள்ள பெட்ரோல் ஆலைகள், விமானத் தொழிற்சாலைகள், விமான நிலயங்கள், இன்னும் அநேக ராணுவ முக்யத்வம் வாய்ந்த இடங்கள்.	......	ஒரு மின்சார ஆலையும், ரயில் ஜங்ஷனும் நாசமாயின. பெர்லினுக்குக் கீழே பூமிக்குள் இருக்கும் அநேக மின்சார ஆலைகள் நாசமாயின. விமான நிலயங்கள் பாழாயின.

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டம்.
30—8—40. (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி.			
	சாமான் கிடங்குகள்.—ஹாம்பர்க் (Hamburg) துறைமுகம்.	……	தீப்பிடித்தது.
	சின்னத்துறைமுகங்கள், ரயில் வண்டிகள் நிற்குமிடங்கள்.—புலாயின் (Boulogne)	……	……
	எண்ணெய்க் கிடங்குகள்.—கெல்ஸன்கர்சன் (Gelsenkirchen) மாக்டீபர்க் (Magdeburg) செர்பரோ (Cherbourg).	……	……
	கப்பல்கள்.—எம்டன் (Emden) …	……	நாசமாயின.
	சாமான் கிடங்குகள்.—ஹாம் (Hamm), ஸோயஸ்ட் (Soest), ப்ரமன் (Bremen)		
	பீரங்கிகள் வைத்திருக்கும் இடங்கள்.—கிரிஸ்நெஸ் (Grisnez).	2 விமானங்களைக் காணோம்.	……
	விமான நிலயங்கள்.—ஹாலந்து (Holland), ஜெர்மனி (Germany).	3 விமானங்கள் கீழே விழுந்தன	
	எரிடிரியாவி (Eritrea) லுள்ள அகோர்டட் (Agordat).	நஷ்டமில்லை.	கட்டடங்கள் நாசமாயின.
31—8—40. (சனிக்கிழமை)			
	பேர்லின் (Berlin).—அநேக ராணுவ முக்யத்வம்வாய்ந்த இடங்கள் சேதமாயின.	……	தீப்பற்றியது அநேக ஜில்லாக்களில் பழு சேதம். பலருக்குக் காயம்.
	எண்ணெய் ஆலைகள்.—கொலோன் (Cologne), மாக்டீபர்க் (Magdeburg).	……	தீப்பிடித்தது.
	சாமான் கிடங்குகள்.—ஹாம் (Hamm), ஸோயஸ்ட் (Soest), ஆஸ்னுப்ரக் (Osnabruck), ஹானோவர் (Hanover).		
	கப்பல்கள்.—எம்டன் (Emden).		அதிகச்சேதம் விளைந்தது.
	ரயில்வே ஜங்ஷன்.—ஹில்டெஷிம் (Hildesheim).	……	……
	விமான நிலயங்கள்.—லாஸ்ட்ரப் (Lastrub), ஆர்ன்ஹெம் (Arnhem), பெர்லின் (Berlin).	…..	நாசமாயின.

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டம்.
31—8—40. (சனிக்கிழமை)—தொடர்ச்சி.			
	பேயர் (Bayer) வெடிகுண்டுகள் செய்யும் ஆலை.—ல்வர்குஸ்ஸன் (Lverkussen)		அநேக இடங்கள் தீப்பிடித்தன.
	வெடிமருந்து ஆலை.—ஸ்பிச் (Spich).	2 விமானங்கள்.	
	விமான நிலயங்கள்.—எல் மிமி (Eltmimi) டொப்ரூக் (Tobruk), டெர்ணு (Derna), பொம்பா (Bomba), எல் கஸாலா (El Gazala), பார்டியா (Bardia), எல் குப்பி (El Gubbi).	நஷ்டமில்லை.	அதிகச் சேதம்.
1—9—40. (ஞாயிற்றுக்கிழமை).			
	விமான நிலயங்கள், ரயில் வண்டிகள் நிற்குமிடங்கள்.—முனிச் (Munich), பெர்லின் (Berlin).	......	அதிகச் சேதம். 80 நிமிஷ நேரம் படையெடுப்பு வெகுநேரம் இருந்தது.
	விமான நிலயங்கள்.—எபர்பர்க் (Yperburg), ஷிபால் (Schipol), இன்னும் அநேக இடங்கள்.		
	விமான உற்பத்திசாலைகள்.—ஸ்டட்கார்ட் (Stottgart).	......	நாசமாயின.
	எண்ணெய் ஆலைகள்.—ஹானேவர் (Hanover), லட்விக்ஷாபன் (Ludwigshafen), நார்டன்ஹாம் (Nordenham);	......	தீப்பிடித்தன.
	வெடிமருந்து ஆலைகள்.—லீப்ஸீக் (Leipzig), பிட்டர்பெல்டு (Bitterfeld), எம்டன் (Emden).	......	வெடித்தன.
	மின்சார உற்பத்தி ஆலை.—காஸல் (Kassel).		
	சாமான் கிடங்குகள்.—ஸோயஸ்ட் (Soest), மான்ஹீம் (Mannheim).		
	விரோயின் ஈ படகுகள் நிற்குமிடம்.—லோரியண்ட் (Lorient).		
	பியட் (Fiat) விமான உற்பத்திச்சாலை.—டூரின் (Turin).		

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டம்.
1—9—40. (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி.			
	மாரேல்லி ஆலைகள்.—எஸ்டோ ஸான் கயோவன்னி (Essto san Giovanni).	......	தீப்பிடித்தது.
	சைன்யங்கள் வசிக்குமிடம், சாமான் கிடங்குகள்.—அஸ்ஸாப் (Assab);	......	கட்டடங்கள் நாசமாயின.
	வேவு பார்த்தல்.—இதாலிய ஸோமாலிலாண்டி (Somaliland)ல் அநேக இடங்கள், கிழக்கு ஆப்பிரிக்கா (Africa) மேற்கு மத்யதரைக்கடல் (Mediterranean).		

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் நஷ்டம்.	அவற்றின் விளைவுகள்.
27—8—40. (செவ்வாய்க்கிழமை).			
	காலையில்.—வைட் (Wight) தீவு.	......	சேதமில்லை. ஒருவருக்கும் காயமில்லை.
	பிற்பகலில்.—இங்கிலாந்தின் தென்கிழக்கு தென்மேற்குப் பட்டணங்கள், மிட்லண்ட்ஸ் (Midlands).	......	கடற்கரையைத் தாண்டி ஒரு எதிரி விமானங்கூட வரவில்லை.
	இரவில்.—லண்டனி (London)ன் வடமேற்கு, வடகிழக்கு, தென்மேற்குப் பாகங்கள், வேல் (Wales)ஸில் சில பட்டணங்கள், இங்கிலாந்தின் தென்மேற்கு, தென்கிழக்குப் பாகங்கள், மிட்லண்ட்ஸ் (Midlands) (இரவு முழுவதும் விமானப் படையெடுப்பு இருந்தது).	3 விமானங்கள்	சில இடங்களில் தீப்பிடித்தது. ஆனால் உடனே அணைக்கப்பட்டது. நஷ்டமில்லை; சிலருக்குக் காயம்.
28—8—40. (புதன்கிழமை).			
	காலையில்.—கெண்டி (Kent) லிருந்து தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம்.	......	......
	பிற்பகலில்.—ஒரு தென்கிழக்குக் கடற்கரைப் பட்டணம், மற்றொரு தென்கிழக்குப் பட்டணத்தில் ஜனங்கள் வசிக்கும் இடம்.	......	9 நாசமாயின. சில வீடுகள் இடிந்தன.

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் நஷ்டம்.	அவற்றின் விளைவுகள்.
28—8—40. (புதன்கிழமை)—தொடர்ச்சி.			
	மாலையில்.—டோவர் (Dover), ராம்ஸ்கேட் (Ramsgate), லண்டன் (London)		சொற்ப சேதம்.
	இரவில்.—லண்டன் (London), வேல்ஸி (Wales)ல் ஒரு பட்டணம், இரண்டு தென்கிழக்குக் கடற்கரைப் பட்டணங்கள்.	......	சிலர் மாண்டனர்.
	ஒரு மிட்லண்ட்ஸ் (Midlands) பட்டணம்.	28 விமானங்கள்.	14 விமானங்கள். 7 விமானிகள் பத்திரம்.
	அலெக்ஸாண்டிரியா (Alexandria).	......	......
	போர்ட் ஸெட் (Port Said).	......	சொற்ப சேதம்.
29—8—40. (வியாழக்கிழமை).			
	காலையில்.—விமானப் படையெடுப்பு இல்லை.	......	......
	பிற்பகலில்.—தென்கிழக்குக் கடற்கரை, ஒருமிட்லண்ட்ஸ் (Midlands) பட்டணம்.	......	சேதமில்லை. சில வீடுகள் இடிந்தன.
	கெண்ட் (Kent) கடற்கரை, ஸில்லி (Scilly)த்தீவு.	......	படையெடுக்காமல் எதிரி விமானங்கள் ஓடி விட்டன.
	இரவில்.—தென்கிழக்குப் பாகம், வடகிழக்குக் கடற்கரை; தென்மேற்குப் பட்டணங்கள், லண்டனில் (London) ஜனங்கள் வசிக்கும் பாகம்.	11 விமானங்கள்	சொற்பசேதம். 3 விமானங்கள்.
30—8—40 (வெள்ளிக்கிழமை).			
	காலையில் :—விமான நிலயங்கள்—ஹோம் கவுன்டீஸ் (Home Counties), கெண்ட் (Kent), ஸர்ரே (Surrey).	......	சிலருக்குக்காயம். சிலர் இறந்தனர்.
	பிற்பகலில்.—இங்கிலாந்தில் ஒரு தென்கிழக்குப்பட்டணம்.	......	தொழிற்சாலைகளுக்கு, சொற்ப சேதம்.
	லண்டன் (London) பிரதேசம்	...	சொற்பசேதம்.

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் நஷ்டம்.	அவற்றின் விளைவுகள்.
30—8—40. (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி.			
	இரவில்.—லண்டன் (London), மிட்லண்ட்ஸ் (Midlands), தென்கிழக்கு தென்மேற்கு இங்கிலாந்து, வேல்ஸ் (Wales) இவைகளில் சில பட்டணங்கள்.	...... 62 விமானங்கள்	ஒரு ஆஸ்பத்திரி மேல் குண்டு விழுந்தது. சிலருக்குக்காயம். 19 விமானங்கள் ஆனல் 10 விமானிகள் உயிர்தப்பினர்.
31—8—40. (சனிக்கிழமை).			
	காலையில்.—ஒரு தென்கிழக்குக் கடற்கரைப் பட்டணம், லண்டன் (London).	......	சொற்ப சேதம், சிலருக்குக்காயம், சிலர் இறந்தனர்.
	விமான நிலயங்கள்.—தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம், கிழக்கு ஆங்கிலியா (Anglia).	......	சேதம் அதிகமில்லை.
	பகலிலும், இரவிலும்.—லண்டன் (London) (ஆறுதரம் எதிரி விமானங்கள் இன்று லண்டன் பட்டணத்தைப் படை எடுத்தன). வடகிழக்கு, வடமேற்கு இங்கிலாந்து, வடமேற்குக் கடற்கரைப் பிரதேசம், மான் (Man) தீவு.	85 விமானங்கள்	மனிதர்களுக்கும் சொத்திற்கும் கொஞ்சம் சேதம். சிலருக்குக் காயம். 37 விமானங்கள்; 25 விமானிகள் உயிர் தப்பினர்கள்.
1—9—40 (ஞாயிற்றுக்கிழமை).			
	காலையில்.—விமான நிலயங்கள்—கெண்ட் (Kent), ஸர்ரே (Surrey), எஸ்ஸெக்ஸ் (Essex) கிராய்டான் (Croydon).	......	சொற்ப சேதம்.
	பிற்பகலில்.—இங்கிலாந்தின் தென்கிழக்குக் கடற்கரை, லண்டன் (London), கெண்ட் (Kent).	......	சிலருக்குக்காயம். சொற்பசேதம் சிலர் இறந்தனர்.
	இரவில்.—வேல்ஸ் (Wales), இரண்டு தென்கிழக்குப் பட்டணங்கள், மிட்லண்ட்ஸ் (Midlands), இரண்டு வடகிழக்குப் பட்டணங்கள்.	24 விமானங்கள்.	ஒரு மாதாகோவில் நாசமாயிற்று. 15 விமானங்கள்; 9 விமானிகள் உயிர் தப்பினர்.
	ஹைபா (Haifa).	......	சொற்ப சேதம். ஒருவரும் சாகவில்லை.

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் நஷ்டம்.	அவற்றின் விளைவுகள்.
2—9—40. (திங்கட்கிழமை).			
	காலையில்.—தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம், லண்டன் (London).		
	பிற்பகலில்.—தென் கிழக்குக் கடற்கரை, கெண்ட் (Kent), தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம், எஸ்ஸெக்ஸ் (Essex), லண்டன் (London).	......	விமானஞ்சுடும் பீரங்கிகளால் முறியடிக்கப்பட்டன. சொற்ப சேதம்.
	இரவில்.—(அங்குமிங்கும் சிற்சில எதிரி விமானங்கள் படை எடுத்தன). இங்கிலாந்தின் தென்கிழக்கு, தென் மேற்கு, வடகிழக்குப் பாகங்கள்.	......	அங்குமிங்கும் கொஞ்சம் தீப் பிடித்தது. சில வீடுகள் நாசமாயின. சிலருக்குக் காயம்.
	மிட்லண்ட்ஸ் (Midlands), வேல்ஸ் (Wales), மால்டா (Malta).	42 விமானங்கள்.	15 விமானங்கள்; 10 விமானிகள் உயிர் தப்பினர்

அனுபந்தம் I.

"புதுக்கோட்டையில் கூடவா!"

ஒரு எச்சரிக்கை.

புதுக்கோட்டையைக்காட்டிலும் அமைதியும், திருப்தியும், ராஜவிச்வாஸமும் நிறைந்த ஸமஸ்தானம் இந்தியாவிலேயேயில்லையென்பது நிச்சயம். இதை எவரும் மறுக்கமுடியாது. ஆனாலும், இங்கு கூட ராஜ்யத்துக்கும், மஹா-ா-ா-ஸ்ரீ His Highness the Raja அவர்களுக்கும், மனித ஸ்வதந்திரத்துக்கும் பகைவர்களிருக்கும் சின்னங்கள் காணப்படுகின்றன.

ஆனல் பகைவர்களென்று சொல்லக்கூட இவர்கள் லாயக்கில்லாதவர்கள். இவர்களுக்கு அந்தஸ்து, யோக்கியதை, புத்தியொன்றுமே கிடையாது; மிகக் கேவலமான, அற்பர்கள்—துரோகிகள்—பொருமை கொண்ட இந்தப் போக்கிரிகள் ஊரூராய்ச்சென்று, கழுதைகளைப்போல் ஊளையிட்டு, பொய் சொல்லித் திரிகிருர்கள். ஒன்றுமறியாத குடியானவர்கள் இவர்கள் பேச்சைக்கேட்டு, எளிதில் ஏய்க்கப்பட்டு, பயந்துவிடுகிருர்கள்.

சைன்யத்தில் சேரச்சொல்லி பிரிடிஷ் பக்கங்களில் கட்டாயப்படுத்துவதாயும், சேராதவர்களைப் போலீஸார் அடிப்பதாயும், இதற்குப் பயந்து புதுக்கோட்டைக்கு ஓடிவந்து விட்டதாயும் கதை ஒன்றை, நகைக்கத்தக்கவாறு, கட்டிக்கொண்டு, யாரோ 5, 6 அனுதிப்பயல்கள் அனுப்பப்பட்டு, ஸமஸ்தானத்துக்குள் திரிவதாக, பொது நலத்தைக்கோரிய சட்ட சபை அங்கத்தினரொருவர் சொல்ல, வெளிப்பட்டிருக்கிறது. ஆதாரமற்ற அபாண்டப் புளுகென்பதோடு, இது ராஜத் துரோகமுமாகும். ஒன்றுமறியாத புதுக்கோட்டை வாசிகளைப் பயமுறுத்தி, ராஜ விரோதிகளாக்க இந்தப் பிரயத்தனம் செய்யப்படுவதென்பதற்குச் சந்தேகமில்லை.

> ஆயிரக்கணக்கான இந்தியர்கள் வாலன்டியர்களாகச் சேர மனுக் கொடுத்தும், (இப்பொழுது) காலியில்லாத காரணத்தால் சேர்க்கப் படாது மனத்தாங்கலோடு காத்துக்கொண்டிருப்பது பத்திரிகைகளைப் படிக்கும் எவர்களுமறிவார்கள். ஆகவே போலீஸார் பலவந்தமாய் அடித்துக் கட்டாயப்படுத்துகிருர்களென்பது முழுப்பொய்; இதற்கு ஆதாரமே கிடையாது.

பரிகசிக்கத்தக்க மற்ருெரு கதை யாரோ வேறு சில மூடர்களோ அல்லது மனம் கசந்த துரோகிகளோ கட்டிவிட்டு உலாவுகிறது. லண்டனிலிருந்து வந்து இறங்கிய ஐரோப்பியக் குழந்தைகள் சமீபத்தில் புதுக்கோட்டை ரயில்வே ஸ்டேஷன் வழியாகச் சென்ருர்கள். லண்டன் நகரம் வெடிகுண்டுகளால் எதிர்க்கப்பட்டு, பிடிபட்டுவிட்டதாயும், ஹிட்லர் அனுமதியின்பேரில் இந்தக் குழந்தைகள் இங்கு வந்திருப்பதாயும், இவர்கள் வாயைக் கிழித்துக்கொண்டு, சீசி, பிதற்றுகிருர்கள்.

இது வேண்டுமென்றே மெய்யைப்பொய்யாகப் புரட்டி, துவேஷத்தை உண்டாக்கச்செய்த சூழ்ச்சி.

(1) லண்டன் நகரத்தில் வெடிகுண்டு விழுந்தது வாஸ்தவம். அதே மாதிரி தொழிற்சாலைகளுள்ள—40, 50 பெரிய ஜெர்மன் பட்டணங்களும் எதிர்க்கப் பட்டிருக்கின்றன. இந்த ஒரு வாரத்தில் பெர்லின் நகரம் நாலு தடவை தகர்க்கப் பட்டிருக்கிறது. வெடிகுண்டுகள் போடப்பட்டதிலிருந்து லண்டன்நகரம் பிடி பட்டதாகச் சொல்லமுடியாது; பிடிபடவில்லை; பிடிக்கவும் முடியாது. இங்கி லாந்தைப் படையெடுப்பதற்காக, பல மாதங்களாகச் செய்திருந்த பிரயத்தனங்கள் எல்லாம் ஒத்திப்போடப்பட்டுவருகின்றன.

(2) (a) யுத்த சேவையில் கப்பல்களெல்லாம் உபயோகப்பட்டுவருவதால் பிரயாணிகளுக்குக் கப்பலில் இடமில்லாமல் போகிறது. ஆகை யால் ரஜாவெடுத்துக்கொண்ட, அல்லது வேலையிலிருந்து வில கிய ஐரோப்பியர்களுக்குக்கூட ஊருக்குப்போய்க் குழந்தை களைப் பார்க்கமுடியவில்லை. ஆகையால் குழந்தைகளை இங்கு வரவழைத்துக்கொள்ளுகிறார்கள்.

(b) பிரிடிஷ் தீவு முழுவதும் ஒரு மகத்தான கோட்டையாக இப் பொழுது மாற்றப்பட்டிருக்கிறது. குழந்தைகள் முதலான சண்டை செய்யமுடியாதவர்கள், இடைஞ்சல் செய்யாமல் வெளிப்படுவதே நல்லதென்று தற்காப்புஇலாகா அபிப்பிராயப் படுகிறது. பெற்றவர்களும் குழந்தைகளைப்பார்க்க ஆசைப் படுகிறார்கள். கடல் மார்க்கங்களெல்லாம் பிரிடன்வசமிருப்ப தால் நிர்ப்பயமாய் பிரயாணம் செய்யலாம். இந்தக் காரணங் களால் குழந்தைகளை சாம்ராஜ்ய நாடுகளிலுள்ள வசதியான இடங்களுக்குப் பத்திரமாய்க் கொண்டுவந்து சேர்க்கிறார்கள்.

(3) ஹிட்லர் அனுமதியின்பேரில் குழந்தைகள் அனுப்பப்பட்டிருப்பதாகச் சொல்லுவது பேத்தலிலும் பேத்தல். ஹிட்லர் கொலை பாதகன்; 3, 4 தினங் களுக்குமுன்னால் (ஸெப்டம்பர் 2-ம் தேதி) 320 குழந்தைகளைக் கானடாவுக்கு ஏற்றிச்சென்ற கப்பலொன்றை உடைத்துவிட்டான்.

இதைப்போன்ற வம்புகள் வேறு சில உங்கள் காதிலும் பட்டிருக்கலாம்: கேட்பதற்குப் பரபரப்பைக் கொடுக்கும். ஆனால் இவைகளைப் பேத்தலென்றும், துரோகமென்றும் தள்ளவேண்டும். இந்த வம்புகளைப் பேசித்திரியும் பயல்களை போலீஸ்காரரிடமாவது, மணியகாரர், அல்லது உள்ளூர் சட்டசபை அங்கத்தினர் வச மாவது ஒப்பித்துவிடவேண்டும். இல்லையேல், உடனே ஊரைவிட்டுத் துரத்திவிட வேண்டும். இவர்கள் எதிரியின் நியமனக்காரர்கள்; துரோகிகள்—நாய்கள் என்று இகழவேண்டும்.

அனுபந்தம் II.

ஆகாயப்போர்—மெய்யும், பொய்யும்.

விமானப்போர் பலப்படப்பட, ஜெர்மானியர் தங்கள் வெற்றியைக் கண்டபடி உயர்த்தி, தங்கள் நஷ்டத்தைக் குறைத்துக் காட்டுகிறார்கள். இதற்கு இரண்டு காரணங்களுண்டு. ஜெர்மன் ஜனங்கள் பயப்படுகிறார்கள்; அவர்கள் மனதைத் திடப்படுத்தவும், அயல் நாட்டார்கள் மனதைக் கலக்கவும் பொய்க் கணக்குத் தயாரிக்கப்படுகிறது. இது ஒரு காரணம். பிரிடிஷ் (பி. பி. ஸி.) ஒலிபரப்புக் கணக்குள்பட, எல்லா கவர்ன்மெண்டு கணக்குகளையும் பொய் ஆக்கி விட்டால், மெய் பொய் தெரியாமல் போய்விடும்; கடைசியாக ஜெர்மனியின் பெரும் புளுகை உலகம் நம்பிவிடும், இதுவே இரண்டாவது காரணமாகும். "உலகம் நம்பப் பொய்யைப் பெருக்கு" என்ற ஹிட்லர் உபதேசத்தை இரண்டாம் காரணம் அடிப்படையாய்க்கொண்டது.

விமான நஷ்டக் கணக்குகளை ஜெர்மனியும், பிரிடனும் ஒலிபரப்புகின்றன. இவைகளைக் கீழ் அட்டவணையில் காணலாம். ஜெர்மனியிலிருந்து இந்தியாவுக்குத் தாறுமாறாய் வரும் ஒலிபரப்புகளில் எவை உயர்ந்த தொகைகளோ அவைகள் ஜெர்மன் கணக்காக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. பிரிடிஷ் கணக்குகள் பிரிடிஷ் ஒலிபரப்பிலிருந்து எடுக்கப்பட்டவைகள். முடிவான கவர்ன்மெண்டு கணக்கு இவைகளுக்கு அதிகமாயிருக்கலாம்.

விமான நஷ்டம்.

	பிரிடன் கொடுத்திருக்கும் கணக்கு.		ஜெர்மனி கொடுத்திருக்கும் கணக்கு.	
	ஜெர்மன் விமானங்கள்.	பிரிடிஷ் விமானங்கள்.	ஜெர்மன் விமானங்கள்.	பிரிடிஷ் விமானங்கள்.
ஞாயிறு, ஆகஸ்டு 11 ...	65	26	17	90
திங்கள், ,, 12 ...	62	13	28	96
செவ்வாய், ,, 13 ...	78	13	28	132
புதன், ,, 14 ...	30	7	12	28
வியாழன், ,, 15 ...	180	34	32	143
வெள்ளி, ,, 16 ...	75	22	31	92
சனி, ,, 17 ...	5	—(1)	34	138
ஞாயிறு, ,, 18 ...	144	16	36	147

கணக்கிடும் விதம்.

A.—பிரிடன் கணக்கிடும் விதம்.

"வெகு ஜாக்கிரதையாய்ப் பிழையின்றி விமான நஷ்டம் பிரிடனில் கணக்கிடப் படுகின்றது." (ஸெய்கான் ரேடியோ 19—8—40).

"ஜெர்மன் நஷ்டத்தைக் குறைத்துக் கணக்கிடுகிறோமே ஒழிய அதிகப் படுத்தவில்லை. உடைந்த விமானங்களைத்தான் கணக்கில் சேர்க்கிறோம். பழுது பட்டுத் திரும்பி ஊர்போய்ச் சேரமுடியாத விமானங்களைக் கணக்கில் சேர்க்க வில்லை." (பிரிடிஷ் சமாசார மந்திரி 18—8—40-ல் ஒலிபரப்பியது).

விமானியின் ரிபோர்ட்டை ஊர்ஜிதப்படுத்த மற்றொரு சாக்ஷியும் வேண்டும். இந்த முறை 8—8—40 வரையில் அனுஷ்டானத்திலிருந்தது. பிறகு ஜெர்மன் விமான நஷ்டம் அதிகமாக ஆக, இது சந்தேகத்துக்கு இடம் கொடுத்தது. ஜெர் மனியும் சாக்ஷிகள் ரிபோர்ட்டு மட்டும் போதாதென்று 10—8—40-ல் ஒலி பரப்பியது. இப்பொழுது கணக்கெடுக்கும் விதமும் சற்று மாற்றப்பட்டிருக்கிறது. அதாவது, நிலயத்துக்குத் திரும்பியவுடன், பரீக்ஷை செய்வதில் தேர்ந்தவர்களைக் கொண்டு விமானிகள் விசாரிக்கப்படுகிறார்கள். சந்தேகம் சிறிது இருந்தாலும் கணக்கில் சேர்ப்பதில்லை. சம்பூர்ணமாக விசாரிக்கவேண்டியிருப்பதால் சற்று தாமதமாகிறது. ஜெர்மானியர் முந்திக்கொண்டு பொய்க் கணக்குக் கொடுத்து விடுகிறார்கள்.

ஜெர்மன் நஷ்டம் திகைக்கும்படியே இருக்கிறது: ஆனால் நஷ்டம் குறைத்தே சொல்லப்பட்டிருக்கிறது.

பிரிடிஷ் கணக்கு அடக்கமானதென்பதற்கு நல்ல அத்தாக்ஷி ஒன்றிருக் கிறது. ஜுலையில் 76 இதாலிய விமானங்கள் உடைந்ததாக பிரிடிஷ் கணக்கு. இதாலியக் கணக்கும் இதுதான். அதாவது, இதாலிக் கணக்குப்படி ஜுலையில் திரும்பிவராத, இறந்த விமானிகள் 76 பேர்கள்.—இதாலி நஷ்டத்தைக் கணக் கிட்டபடியே, ஜெர்மன் நஷ்டமும் கணக்கிடப்படுகிறது.

தாக்ஷண்யமில்லாமல் சோதித்து, தப்பில்லாது பிரிடன் கணக்குத் தயாரிப் பதாக ஜெர்மனியே சில மாதங்களுக்கு முன் ஸ்தோத்திரம் செய்தது. பொய் சொல்லுகிறவர்களை ராணுவக் கச்சேரிகள் விசாரிப்பதாகக்கூட சொல்லிற்று. ஆனால் இது மட்டும் உண்மையில்லை.

B.—ஜெர்மன் கணக்குத் தயாரிக்கப்படும் விதம்.

இதாலியைப்போல் நஷ்ட ஜாப்தா ஜெர்மனி பிரசுரிப்பதில்லை. கண்ணால் பார்த்த சாக்ஷி போதாதென்றால் வேறு எந்தப் புலனை உபயோகிக்கிறது—6-ம் புலனா? தாங்கள் முந்திக்கொள்ளவேண்டுமென்ற முக்கிய நோக்கங்கொண்டு பொய்க் கணக்கைக் கொடுத்துவிடுகிறார்கள். சில சமயங்களில் விமானங்கள் பறந்துகொண்டிருக்கும்போதே கணக்குக் கொடுத்தாய்விடுகிறது.

பிரிடன் கணக்கைச் சில சமயம் மாற்றியும் சொல்லிவிடுகிறார்கள். இதனால் கேட்பவர்களுக்குப் புரியாமல் போகிறது.

பிரிடன் சொன்னதைத் திருப்பிச் சொல்லும் சுபாவமும் இருக்கிறது. இதற்கு இரண்டு உதாரணங்கள் : "நாங்கள் இரண்டு சாக்ஷிகளை விசாரிக்கிறோம்" என்பது ஒன்று. "28 ஜெர்மன் விமானங்கள் திரும்பவில்லை ; ஆனால் 5 விமானிகள் காப்பாற்றப்பட்டார்கள்" என்பது மற்றொன்று. பின் சொன்னதுதான் வேடிக்கை. பிரிடிஷ் விமானம் பிரிடனிலேயே உடைந்துபோனால் விமானிகள் குடை (Parachute)யைக்கொண்டு சொந்த தேசத்திலிறங்கித் தப்பலாம். ஜெர்மன் விமானிகள் இங்கிலாந்தில் எப்படித் தப்புவது—எங்கே தப்புவது?

ஜெர்மனியை நம்பலாமா?

தொடர்ச்சியாய் இதுவரை பிழையின்றி ஜெர்மனி ஒலிபரப்பி இருக்கிறதென்றும், ஆகவே இனியும் நம்பவேண்டுமென்றும் சொல்லப்படுகிறது.

ஆனால், இது வரையில் நம்பக்கூடியதாயிருந்ததாவென்று பார்ப்போம்.

1. கிராப் ஸ்பி (Graf Spee)—இந்தக் கப்பல் முடிவில் பிரிடிஷ் கப்பல்களை எதிர்க்கப் பயந்து தன்னையே தான் உடைத்துக்கொண்டு கடலில் மூழ்கியது அது வரையில் அது வெற்றியடைந்ததாகவே ஜெர்மனி ஒலிபரப்பிக்கொண்டிருந்தது.

2. ஆர்க் ராயல் (Ark Royal)—ஸெப்டம்பர் 7-லிருந்து அடிக்கடி இந்தக் கப்பல் 'அமிழ்த்தப்பட்டதாக' ஒலிபரப்பப்பட்டது. கிராப் ஸ்பியைப் பிடிக்க ஒளிந்து நிற்பதாக டிஸம்பர் 18-ல் ஒலிபரப்பு ; இதாலியர் போட்ட இரண்டு பெரிய குண்டுகளால் அடிபட்டதாக ஜுலை 11-ம்தேதி ஒலிபரப்பு.

3. ரிபல்ஸ் (Repulse)—இந்தக் கப்பல் அக்டோபர் 16உ ஒலிபரப்புப்படி 'பழுதாகி, சண்டைக்கு லாயக்கில்லாமல் ஆகிவிட்டது'; டிஸம்பர் 6உ ஒலிபரப்புப்படி மறுபடியும் 'பழுதாய் விட்டது'; புனர் ஜன்மம் எடுத்து, கடல் தரையில் இருந்து மேல்வந்து பிப்ரவரி 9-ல் மறுபடியும் ஒருமுறை 'பழுதுபட்டது'; பிப்ரவரி 16 செய்திப்படி 120 நாட்களுக்கு முன் ஏற்பட்ட பழுதைப் பார்க்க கப்பல் கட்டுமிடத்துக்கு அனுப்பப்பட்டது.

4. பிரிடிஷ் நஷ்டம்.—பிரிடன் கையிருப்பைவிட அதிகமாகவே, யுத்தக் கப்பல்கள், விமானங்கள் பிரிடனுக்குச் சேதமாயிருப்பதாகக் கொடுத்திருக்கும் பொய்க் கணக்கைக் கீழே பார்க்கலாம்.

தினுசு.	உண்மையான நஷ்டம்.	யுத்தம் ஆரம்பித்த போதிருந்த தொகை.	எதிரி கொடுத்திருக்கும் பொய்க் கணக்கு.
பெரிய யுத்தக் கப்பல்கள் ...	1	15	32
விமானம் ஏற்றிச் செல்லும் கப்பல்கள்.	2	7	10
சிறிய யுத்தக் கப்பல்கள் ...	3	62	83
நாசகாரிகள்	28	185	92
நீர் மூழ்கிகள்	13	58	52

5. டன்கர்க் (Dunkirk)—பிரான்ஸுக்கும், பிளாண்டர்ஸுக்கும் அனுப்பப்பட்ட பிரிடிஷ் படை சரணகதி அடையவேண்டுமென்றும், இல்லாவிடில் நிர்மூலமாக்கப்படுமென்றும் சொன்னதாக ஜெர்மானியர் பிரஸ்தாபம் செய்கிறார்கள். ஆனால சரணகதி செய்யவுமில்லை, நிர்மூலமாக்கப்படவுமில்லை. சைன்யம் பழுதுபடாமல் திரும்பி வந்தது உலக வீரச் செயல்களில் ஒன்றாகும்.

நடு நிலைமை வகிக்கும் பத்திராதிபர்களை நடத்தும் விதம்.

A.—ஜெர்மனி நடத்தும் விதம்.

நடுநிலைமை வகித்த பத்திராதிபர் ஒருவர் ஏதோ சுற்றிப்பார்த்ததாகவும், பார்த்ததில், பிரிடிஷ் விமான எதிர்ப்பால் ஜெர்மனியில் சேதமொன்றுமில்லை என்று சொன்னதாகவும் ஜெர்மனி அடிக்கடி ஒலிபரப்புவதுண்டு. ஆனால் பத்திராதிபர் பெயர் வெளி வராது. பத்திராதிபர்களுக்குச் சுயேச்சையும் கிடையாது.

வாரன் இர்வின் (Warren Irvin) என்ற ரேடியோ வியாக்கியான நிருபர் (Commentator) பெர்லினிலும், லண்டனிலும் வேலை பார்த்திருக்கிறார். இப்பொழுது லண்டனில் வசிக்கிறார். அவர் அபிப்பிராயம் குற்றமற்றது. அவர், "ஜெர்மானியர் நடத்தையெல்லாம் பாசாங்கு; நிருபர்கள் உள்ளதை எழுத முடியாது; ஜெர்மனிக்குச் சாதகமாய் எழுதினால் வெகுமதியுண்டு; இல்லாவிட்டால் தண்டனை; சாதகமாயெழுதாத நிருபர்கள் சுற்றுப் பிரயாணங்களில் சேர்க்கப்படமாட்டார்கள். மூன்று முறை பரிசோதித்த பிறகுதான் நிருபர்கள் பிரசுரிக்க அனுமதி கிடைக்கும்." என்று சொல்லியிருக்கிறார்.

ஹிட்லர் நேயரான முஸோலினி வார்த்தைகளிலிருந்து பின் வரும் ரகசியங்கள் வெளிப்படுகின்றன.

(1) "ஆக்ரமிக்கப்பட்ட நாடுகளில் வசித்துவந்த இரண்டு அமெரிக்க நிருபர்கள் வெளியேறவேண்டுமென்று ஜெர்மன் உத்தரவு பிறந்திருக்கிறது." 13—8—40.

(2) "ஜெர்மன் கைவசமிருக்கும் பிரேஞ்சு பாகத்திலிருந்து போய்விட வேண்டுமென்று மற்றொரு அமெரிக்க பத்திராதிபருக்கும் உத்தரவு செய்யப்பட்டிருக்கிறது என்று பேர்லினிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது." 14—8—40.

B—நடுநிலைமைப் பத்திராதிபர்களை பிரிடன் நடத்தும் விதம்.

"போர் புரியும் தேசங்களுக்குள் பிரிடனில் சமாசாரங்கள் தாமதமின்றிப் பரிசோதிக்கப்பட்டு வெகு விரைவாகப் பிரசுரம் செய்யப்படுகின்றன." (நியூயார்க் டைம்ஸ்).

அமெரிக்கர்களும், சாம்ராஜ்யக்காரர்களுமடங்கிய நிருபர் கோஷ்டி ஒன்று சுற்றுப்பிரயாணம் செய்தது. அவர்கள் இஷ்டப்படி பிரிஸ்டல் (Bristol) துறைமுகத்திலுள்ள கப்பல் கட்டும் துறை, எண்ணெய்க் கிடங்கு முதலிய ராணுவ கேந்திரஸ்தானங்களைப் பார்வையிட்டு, ஜெர்மானியர் சொல்லுகிறபடி ஒரு சேதமும் ஏற்படவில்லையென்று ரிபோர்ட்டு அனுப்பியிருக்கிறார்கள்.

உண்மை நடப்பென்ன?

"வாடர்லூ (Waterloo)வில் பிரிடிஷ் நிலப்படை வென்ற மாதிரியும், ட்ரபால்காரில் (Trafalgar) பிரிடிஷ் கடற்படை வென்ற மாதிரியும், இப்பொழுது, அதாவது 1940-ல் பிரிடிஷ் ஆகாயப்படை வெற்றியடையப்போகிறது. குறைந்த விமானங்களைக்கொண்டு ஆகாய ஆதிபத்தியத்தை பிரிடன் சம்பாதித்து விட்டது." (நியூயார்க் டைம்ஸ், 16—8—40.)

"ஏராளமான விமானங்களைக்கொண்டு ஜயித்துவிட ஜெர்மனி செய்த பிரயத்தனம் பலிக்கவில்லை; பயம் ஏற்பட்டதாயுமில்லை." (நியூயார்க் ஹெரல்ட் டிருப்யூன், 17—8—40.)

"வழக்கம்போல், போட்டதிட்டப்படி, ஒற்றுமையாயும், உறுதியோடும் பிரிடிஷ் மக்கள் ஆகாயப்போர்செய்து, கீர்த்தியையும், வெற்றியையும், அடைகிறார்கள். இது உண்மை." (பால்டிமோர் ஸன், 17—8—40.)

"போர்ட்லண்டு துறைமுகத்தையும், கப்பல் கட்டுமிடங்களையும் சுற்றிப் பார்த்தேன். கூரையிலுள்ள ஓடுகளைத் தவிர, முக்கியமான ராணுவ பாகங்கள் ஒன்றும் சேதமாகவில்லை. ஆகாய எதிர்ப்பு திடீரென்று ஏற்பட்டாலும் ஆங்கிலேயர்கள் பதட்டப்படவில்லை. இவர்களோடிருந்தால், குண்டுகள் விழுந்தாலும், நமக்கும் பயமேற்படாது." (நிருபர் மிஸ்டர் மாரோ அனுப்பிய செய்தியிலிருந்து அமெரிக்க கொலம்பியா ஒலிபரப்பு, 17—8—40.)

"பிரிடிஷ் கடற்படை வேலையெல்லாம் சரிவர நடந்துவருகிறது; நாணயம் தவறவில்லை." (மிஸ்டர் ஆலன்பெல், போர்ட்லண்டைப் பார்த்துவிட்டு வந்து அமெரிக்க நிருபரொருவருடன் சொன்னது, 16—8—40.)

"பிரிடன் போட்டிருக்கும் கடல் முற்றுகையால் ஜெர்மனிக்கேற்பட்டிருக்கும் கஷ்டத்தை நான் அறிவேன். அவ்வளவு கஷ்டம், ஜெர்மன் விமான எதிர்ப்பால் பிரிடனுக்கேற்படவில்லை. லண்டனில் வியாபாரம் முதலிய காரியங்கள் வழக்கம்போல் நடக்கின்றன." (மிஸ்டர் வாரன் இர்வின் 12—8—40-ல் ஒலிபரப்பியது.)

அனுபந்தம் III.

ஜெர்மன் பொய்கள்.

13—8—40.

"பிரிடனுடைய எதிர்ப்புச் சக்தியைக் குறைப்பதே ஜெர்மன் ராணுவ இலாகா நோக்கமே ஒழிய, பிரிடனைப் பயமுறுத்த வரவில்லை. இது பிரிடிஷ் மந்திரி மிஸ்டர் ஏமரிக்குத் தெரியவில்லை."

குறிப்பு:—(1) வார்ஸா எதிர்ப்பில், நகரத்தில் ஜனநெருக்கமான இடங்களில் வீடுகள் 100-க்கு 70 சேதமென்றும், அனேக மாதங்களாகியும்,

இடிந்த வீடுகளுக்குக்கீழே சவங்கள் இன்னும் கிடப்பதாயும், வார்ஸாவைச் சுற்றிப் பார்த்து வந்த 'ஜேர்மன் சகாயசபை' அங்கத்தினரொருவர் கூறுகின்றார். (ஜேர்மன் ஒலிபரப்பு, 25—7—40).

(2) பிரிடன்மேல் ஜேர்மனி படையெடுக்கும்போது தாய் குழந்தையைத் துறப்பாள்; மனைவி கணவனின் எரிந்த உடலைக் கண்டு புலம்புவாள்; ஸ்திரீகள் வீடுவாசலில்லாமல் பரிதபிப்பார்கள்; ஜனங்கள் ஆகாரமின்றிக் கதறுவார்கள். (ஜேர்மன் ஒலிபரப்பு, 6—8—40).

2. "*பிரசார சண்டைக்கு ஓச்சல் ஒழிவில்லை. ஜெர்மனி இதைக் கவனியாது வெற்றியடைவதிலேயே நோக்கத்தைச் செலுத்தும்.*"

குறிப்பு :—"பிரசாரத்தை நான் நடத்தினல் யுத்தப்போக்கையே மாற்றி விடுவேன் என்று ஒரு சமயம் தோன்றுகிறது." (ஹிட்லர்-மைன் காம்ப்).

3. "*வைஸ்ராயின் யோசனைகளை இந்தியக்கக்ஷிகளெல்லாம் நிராகரித்து விட்டன.*"

குறிப்பு :—நிபந்தனைகள் சில கேட்டு, ஹிந்து மகாசபை சம்மதித்து விட்டது. முஸ்லீம் அபிப்பிராயம் இன்னும் கொடுபடவில்லை: பொதுவாகச் சொல்லுமிடத்து, அனுகூலமாயிருக்கலாம். லிபரல் கக்ஷி ஸம்மதித்து விட்டது. காங்கிரஸ் விரோதமாயிருந்தாலும் இன்னும் அபிப்பிராயம் கொடுக்கவில்லை.

4. "*பிரிடிஷ் விமானிகள் களைத்துப்போகிறார்கள்—தூங்கிவிடலாம்.*"

குறிப்பு :—இந்தத் 'தூங்கிய' விமானிகள், ஆகஸ்டு 18-ம் தேதிவரை 571 ஜெர்மன் விமானங்களைச் சுட்டுத்தள்ளியிருக்கிறார்கள்.

15—8—40.

5. "*நேற்றிரவு ஜெர்மன் விமானிகள், குடைகள் (Parachutes) வழி பர்மிங்காமிலிறங்கியதாகத் தெரிகிறது. ஊருக்கு வெளியே ஒரு மேட்டுத்தாக்கில் குடை ஒன்றுமகப்பட்டது. வேறு ஊர்களிலும் குடைகளகப்பட்டிருக்கின்றன. போலீஸார் மறைக்கிறார்கள்.*"

குறிப்பு :—ஆகஸ்ட் 13, 17ல் விமானிகளில்லாமல் குடைகள் மட்டும் சில கீழே விழுந்தன. விமானிகள் கட்டிக்கொண்டிறங்கும் வார்கள்கூட அவிழ்க்கப்படவில்லை; ஆகவே ஆட்கள் வரவில்லை என்பது திண்ணம். விமானிகள் இறங்கிவிட்டதாகப்

பயமுறுத்துகிறார்கள். 17-ம் தேதி, சோதனை தீபங்களால் விழுந்த இடங்கள் தெரிந்து தேசக்காப்புப்படை போய்ப்பார்க்க, குடைகளைத்தவிர, விமானிகளிறங்கவில்லையென்று தெரிந்தது. குடைகளைக் கண்டால் அதிகாரிகளுக்கு ரிபோர்ட் செய்ய உத்தரவு போட்டதிலிருந்து 80 குடைகளும் ரிபோர்ட்டாய் இருக்கின்றன. பிரிடனில் பாதுகாப்பு முறைகளைச் சோதிக்க இது நமக்கு நல்ல சமயமாய் விட்டது.

6. "*பிடிபட்ட நாடுகளிலிருந்து ஜெர்மனி உணவுப் பொருள்களைத் திருடிக் கொண்டுபோவதாக பிரிடன் சொல்லுவதை ஜெர்மனி மறுக்கிறது.*"

குறிப்பு :—(1) "பிரிடன் போட்ட முற்றுகையால், ஜெர்மனி இதாலி தேசங்களுக்கு உணவு குறைந்து விட்டது; பிடிபட்ட நாடுகளில் பஞ்சமேற்படலாம்; அதற்கு ஜெர்மனி என்ன செய்யும்?" (ஸ்டிபானே செய்தி, 15—8—40)

(2) இதாலியும், ஜெர்மனியும் ஒரே விதமாகப் போய்ப் பிரசாரம் செய்ய, கோயபில்ஸ், இதாலிய ஒலிபரப்பு கம்பேனி அக்கிராஸனரை அழைத்திருக்கிறார்.

7. "*இந்தியாவிலிருக்கும் தங்கத்தையெல்லாம் கவர்ன்மெண்டு பறிமுதல் செய்யப்போவதாகக் கேள்விப்பட்டு இந்தியர்கள் சியாம் (Siam) முதலிய அயல் நாடுகளுக்குத் தங்கள் தங்கத்தை அனுப்புகிறார்கள்.*

குறிப்பு :—இந்திய கவர்ன்மேண்டுக்கு இந்த உத்தேசமும் கிடையாது; பிரஜைகள் சொத்தை அபகரிக்கவுமாட்டார்கள். சென்ற மூன்று மாதங்களில் ஒரு அவுன்ஸ் (ounce) தங்கம்கூட வெளியேறவில்லை.

8. "*தன்னையும் காத்துக்கொண்டு, பிரிடன் ஜெர்மனிமேல் படையெடுக்கவும் போகிறதென்று யுத்த மந்திரி மிஸ்டர் ஈடன் சொன்னார். அறிந்தவர்கள் நகைப்பார்கள். இந்த மூன்று நாள் போரில் கப்பல்களும், விமானங்களும் நிற்கும் இடங்களெல்லாம் சேதமாய்விட்டன. இதற்குப் புது இடங்கள் பார்த்துக் கொண்டல்லவோ ஜெர்மனியை எதிர்க்கப்போகவேண்டும்.*"

குறிப்பு:—(1) வட இதாலியில் பாதுகாப்பில்லாத ஊர்களை பிரிடிஷ் விமானங்கள் உயரப் பறந்து தாக்கின. (ஜேர்மன் ஒலிபரப்பு—2½-மணிக்கு முன்னல்).

(2) ஆல்போர்கை (ஹாலண்டில்) எதிர்க்க வந்த 23 பிரிடிஷ் விமானங்களில் 16 சுட்டுத் தள்ளப்பட்டன. (ஜேர்மன் ஒலிபரப்பு—முதல் நாள்).

(3) கோர்க்ஸ்வீலர் (ஜெர்மனி) பிரிடிஷ் விமானங்களால் எதிர்க்கப் பட்டது. (ஜெர்மன் ஒலிபரப்பு—மறுநாள்).

16—8—40.

9. "*நில பீரங்கிகள் பிரயோசனமில்லை; பைடர் விமானங்கள்தான் எதிர்த்தன.*"

குறிப்பு:—18-ம் தேதி, 70 ஜெர்மன் பாம்பர் விமானங்கள் நிலபீரங்கிகளுக்கு இரையாயின. இதிலிருந்து பீரங்கிகளின் உபயோகத்தை யூகிக்கலாம். தேம்ஸ் முகத்துவாரத்தை அணுகியபோதே பீரங்கிகள் சரமாரி பொழிந்தன. சிறிது நேரத்தில் அங்கு வந்த பிரிடிஷ் விமானங்கள் எதிரி விமானங்கள் ஓட்டம் பிடிப்பதைப் பார்த்தன. (பிரிடிஷ் ஆகாய இலாகா செய்தி).

10. "*கிராய்டன் விமான நிலயத்தை எதிர்த்தபோது, மேகத்தைப்போல் புகை கிளம்பிற்று.*" (அஸோஷியேடட் பிரஸ் சொல்லி அமெரிக்க நியூஸ் ஏஜென்ஸி வெளியிட்ட செய்தி.)

குறிப்பு:—அமெரிக்க நியூஸ் ஏஜென்ஸிமேல் அநியாயமாய்ப் பழி சுமத்தப் படுகிறது. ஜெர்மன் விமானமொன்றுவது திரும்பவில்லை: செய்திமட்டும் எப்படிப் போயிருக்கும்?

17—8—40.

11. "*கோரயுத்தம் நடக்கிறது; ஜெர்மன் எதிர்ப்பைத் தடுக்க, பகீரதப்பிரயத்தனம் செய்யப்படுகிறது. இருதிறத்திலும் ஒவ்வொரு விமானமும் உடைந்து போகும்வரை சண்டையிலீடுபடுகிறது.*"

குறிப்பு:—"பெரிய எதிர்ப்பிருக்குமென்று ஜெர்மானியர் பெரிய படையைத் திரட்டி வந்தார்கள்; எதிர்க்க பிரிடிஷ் விமானங்களைக் காணோம்; ஏதோ சில பாதுகாப்பு விமானங்கள் மட்டும் தனித் தனியாய் எதிர்ப்பட்டன. (ஜெர்மன் ஒலிபரப்பு—மாலை 5½ மணி.)

18—8—40.

12. "*ஜெர்மனி இங்கிலாந்தை நெருங்கிவிட்டது; ஆனால் இங்கிலாந்து ஜெர்மனியை நெருங்கவில்லை.*"

குறிப்பு:—இது என்ன புதுக் கணக்காய் இருக்கிறது. இவ்விதம் கணக்குப் போட்டுத்தான் விமான நஷ்டங்கள் ஒலி பரப்பப்படுகின்றன போலும்.

13. "50-லக்ஷம் டன் வியாபாரக்கப்பல்கள் உடைந்துபோனதிலிருந்து பிரிடனுக்குக் கஷ்டம் அதிகமாய்விட்டது."

குறிப்பு :—யுத்த ஆரம்பத்திலிருந்து நஷ்டம் : பிரிடிஷ் கப்பல்கள் 1,340,000 டன் ; நேயக் கப்பல்கள்—436,633 டன் ; நடு நிலைமைக் கப்பல்கள்—738,162 டன்; மொத்தம் 2,514,795 டன். ஜெர்மன் கணக்கு இதற்கு இரண்டு பங்கு. எதிரிக் கப்பல் களைப் பிடித்தும், புதுக் கப்பல்கள் கட்டியும், அயல் நாட்டுக் கப்பல்களை பிரிடிஷ்க் கப்பல்களாக மாற்றியும் நஷ்டம் ஈடு செய்தாய்விட்டது. மேலும், டென்மார்க், பிரான்ஸ் கப்பல்கள் நம் கைவசமிருக்கின்றன. ஆரம்பத்திலேயே 18,500,000 டன் கப்பல்கள் கைவசமிருந்தன.

இதாலியப் பொய்கள்.

13—8—40.

14. *"இஜிப்தில் பெரிய நகரங்கள் காலி செய்யப்படுவதாகச் சில நாட்களுக்கு முன் நாம் சொன்னதை பிரிடிஷ் ஒலிபரப்பு மறுக்கிறது. ஜூலை 11–14ல் 25,090 பிரயாணிகள், கைரோவைவிட்டு வெளிப்போனதாக ரெயில்வே கணக்கிருக்கிறது. இதற்குக் காரணமென்ன ?"*

குறிப்பு :—பம்பாய் நகரத்திலிருந்து தினசரி இதற்குமேல் பிராயாணிகள் புறப்படுகிறார்கள். 1937 ஸென்ஸஸ்படி கைரோ ஜனத் தொகை 1,307,422 பேர்கள்.

15—8—40.

15. *"பிரிடிஷ் கடற்படை எங்கே? அதன் மேன்மையெங்கே? பழுதுபட்டு வெளிக்கிளம்பவில்லையா?"*

குறிப்பு :—(1) "பிரிடிஷ் யுத்தக் கப்பலில் ஏறிக்கொண்டு 48 மணி நேரம் ஜிப்ரால்டரை இப்பொழுதுதான் சுற்றிப் பார்த்தேன்; பிரிடிஷ் அனுமதியின்றி ஒரு கப்பலும் இங்கு வரமுடியாது; இதை அனுபவத்தில் தெரிந்துகொண்டேன்." (ராய்டர் விசேஷ நிருபர்-15—8—40).

(2) ஸீலாவுக்கும், பேர்பேராவுக்கும் இடையே இருந்த இதாலிய சைன்யத்தையும்; லிபியா, பார்டியா, கபூஸா—முதலிய இடங்களையும் பிரிடிஷ் கப்பல்கள் தகர்த்தன.

17—8—40.

16. *"பிரெஞ்சு உதவியில்லாததால் ஸோமாலிலாண்டைக் காலிசெய்ய வேண்டியதாயிற்றென்று சொல்லுவதிலிருந்து பிரிடனுக்குத் தனியாய்ச் சண்டை செய்யமுடியவில்லையென்று தெரிகிறது."*

குறிப்பு :—இந்த இகழ்ச்சி வார்த்தையை லக்ஷியம் செய்வதற்கில்லை. இப்பொழுது பிரிடன் தனிப்போர் செய்கிறது. கடைசிவரையில்

போர் செய்யச் சபதம் செய்துகொண்டிருக்கிறது. இதனால் பிரான்ஸுக்கும் க்ஷேமமுண்டாகப் போகிறது. இதெல்லாம் உலகமறிந்த விஷயங்கள்.

17. "*தங்கள் அரசாங்கத்தைத் தாங்களே அமைத்துக்கொள்ள சம்மதியாவிட்டால் பலாத்கார வழியை நாடப்போவதாக இந்திய நாஷனல் காங்கிரஸ் சொல்லிவிட்டது.*"

குறிப்பு:—உள்நாட்டுப் போராட்டத்தில் அஹிம்ஸா முறையென்றும், அயல் நாட்டுச் சண்டைக்கு ஆயுதப்பிரயோகமென்றும் காங்கிரஸ் தீர்மானித்திருக்கிறது.

———

PROGRAMME OF LECTURES

OF THE

Pudukkottai War Information Bureau.

LECTURE IX.

1940—

September	7, Saturday ...	Town Hall ...	6.30 p. m.
	8, Sunday ...	Arimalam ...	5.30 p. m.
		Vehupatti ...	5.30 p. m.
	9, Monday ...	College (2) Tamil ...	10.25 a. m.
		Rani's School ...	10.30 a. m.
		Yembal ...	5.30 p. m.
		Konapet ...	5.30 p. m.
	10, Tuesday ...	C. S. M. School ...	10.00 a. m.
		College (1) English ...	10.25 a. m.
		Tirumayyam ...	5.30 p. m.
		Vendampatti ...	5.30 p. m.
		Ponnamaravathi ...	5.30 p. m.
	12, Thursday ...	Teachers' Association.	3.30 p. m.
		Annavasal ...	5.30 p. m.

LECTURE X.

14, Saturday ...	Town Hall ...	6.30 p. m.
15, Sunday ...	Kulipirai ...	5.30 p. m.
	Rangiam ...	5.30 p. m.
	Keeranur ...	5.30 p. m.
16, Monday	Rani's School ...	10.00 a. m.
	College (1) English ...	10.25 a. m.
	Nachandupatti ...	5.30 p. m.
	Alangudi ...	5.30 p. m.
17, Tuesday	College (2) Tamil ...	10.25 a. m.
	Viralimalai ...	5.30 p. m.
	Venkatakulam ...	5.30 p. m.
18, Wednesday	Karambakkudi ...	5.30 p. m.
20, Friday ...	C. S. M. School ...	10.00 a. m.

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,850—7-9-40,